
# நூலறுந்த பட்டம்

92



ச் சுடர்மணி

ழுவில் அமுதன்

JPL
C6424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

KOHA JPL
மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# நூலறுந்த பட்டம்

(சிறுகதைகள்)

இலக்கியச் சுடர்மணி

## ஒலுவில் அமுதன்

# NOOLARUNTHA PADDAM

OLUVIL AMUTHAN

137170

ரக்ஷானா வெளியீட்டகம்
அக்கரைப்பற்று - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நூலறுந்த பட்டம் |
| நூலின் வகை | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | ஒலுவில் அமுதன் (ஆ. அலாவுதீன்) |
| ஆசிரியர் முகவரி | : | 67, புதுப்பள்ளிவீதி,<br>அக்கரைப்பற்று - 05.<br>இலங்கை. |
| தொலைபேசி | : | 067 - 78339 |
| கையடக்கத் தொலைபேசி | : | 0777 - 141609 |
| எழுத்தளவு | : | 12 |
| அச்சுப் பதிப்பு | : | 2003 செப்டம்பர் 18 |
| பதிப்பகம் | : | செலக்ஸன் ஓப்செட் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பிரதிகள் | : | 600 |
| பக்கங்கள் | : | 102 |
| அட்டைப்படம் | : | இப்திகார் எம். ஹனீபா |
| கணனி வடிவமைப்பு | : | கொம்ப்றோ அக்கரைப்பற்று. |
| வெளியீடு | : | ரக்ஷானா வெளியீட்டகம்,<br>அக்கரைப்பற்று - 05. |

**ISBN No. : 955-8642-02-9**

விலை / Price } **120/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*

## இந்நூலாசிரியரின் பிற நூல்கள்...

| | | |
|---|---|---|
| மனக்கோலம் | (1988) | கவிதைத்தொகுதி |
| மரணம் வரும்வரைக்கும் | (1999) | கவிதைத்தொகுதி |
| கலையாத மேகங்கள் | (1999) | சிறுகதைத்தொகுதி |
| நாம் ஒன்று நினைக்க | (2000) | நாவல் |
| மனங்களிலே நிறங்கள் | (2001) | சிறுகதைத் தொகுதி |
| கரையைத் தொடாத அலைகள் | (2002) | நாவல் |
| கூடில்லா குருவிகள் | (2002) | சிறுவர் இலக்கியம் |

பொது நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் என் நெஞ்சில்

நீங்கா இடம் பெற்றுவாழும்

அன்புத் தந்தை

மர்ஹூம் இஸ்மாலெப்பை மரைக்கார்

ஆதம்லெப்பை அவர்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பார்வையில்

## ஒலுவில் அமுதன்...

பொது நூலகப் பிரிவு
நூலக சேவை
யாழ்ப்பாணம்

வாசகர்களை வகைப்படுத்துவதுபோல எழுத்தாளர்களையும் வகைப்படுத்த முடியும்.

1) வாசிப்பதற்கு இலக்கியமே இல்லையென தாமே எழுதி, தாமே வாசிப்பதற்கு எழுதுபவர்கள்.

2) அற்புதமான கருக்களை வைத்து அவர்களைத் தவிர மற்றவர்களை திணற வைக்க கடும் பதங்களைச் சேர்த்து எழுதுபவர்கள்.

3) சாதாரண மொழிநடையில் கவர்ச்சியாக எழுதி வாசகர்களைக் கவர எழுதுபவர்கள்.

4) மக்கள் வாழ்க்கையோடு இணைந்து மனித வாழ்க்கையை மனிதர்கள் அறிய வேண்டுமென எழுதுபவர்கள்.

5) பிராந்திய பேச்சு வழக்கில் மக்கள் வாழ்க்கையை புலப்படுத்த எழுதுபவர்கள்.

இவ்விதம் எழுத்தாளர்களை வகைப்படுத்தலாம். இந்த வகைகளில் ''ஒலுவில் அமுதன்'' எவ்வகைக்குள் உட்படுவார் என்பதனை அறிய அவரது நூல்கள் மனக்கோலம், மரணம் வரும்வரைக்கும், கலையாத மேகங்கள், நாம் ஒன்று நினைக்க, மனங்களிலே நிறங்கள், கரையைத் தொடாத அலைகள், கூடில்லாக் குருவிகள்

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையையும் வாசித்தால் அறியலாம்.

வாசகர்கள் அவரவர் ரசனைக்குத் தக்கவாறு வாசித்த இலக்கியம் பற்றி உயர்த்துவர். தாழ்த்துவர். எழுத்தாளன் இதற்கு செவிமடுக்கத் தேவையேயில்லை.

இவரது எழுத்துப் பாதை இவரை உயர்த்திச் செல்வதற்கு இடம் கொடுப்பதை இவரது நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

வங்கி வேலையின் நடுவே இலக்கியத்தை நேசித்து எழுதுவதற்கு எப்படி இவருக்கு காலம் கிடைக்கின்றது என்பது வியப்புத்தான்! முன்னேறி வரும் படைப்பாளியான இவர் இலக்கியத்தில் நிச்சயம் முதிர்ச்சி பெறுவார்.

கவிஞர் ஏ. இக்பால்
(கலாபூஷணம்)

ரிபாயா மன்ஸில்
தர்ஹா டவுன்
தொ.பே. 075 – 580784

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்தாளர் ஒலுவில் அமுதன் அவர்களுக்கு கல்முனை பதில் நீதிபதி அல்-ஹாஜ். ஏ.எம். பதுறுதீன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார். அருகே கலாபூஷணம் மருதூர்வாணர் (ஈழபாரதி) எழுத்தாளர் மருதமுனை மஜீட் அவர்களும் காணப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒலுவில் அமுதன் அவர்களுக்கு கலாபூஷணம் மருதூர் வாணர் ''இலக்கியச் சுடர்மணி'' என்ற பட்டத்தை வழங்கி வைக்கின்றார். நடுவில் எழுத்தாளர் மருதமுனை மஜீத், பதில் நீதவான் சட்டத்தரணி ஏ.எம். பதுறுதீன் அவர்களும் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# மனம் திறந்து ....!

என் வேக எழுத்தும், விறுவிறுப்பான வாக்கிய அமைப்பும் கண்ட, பொறாமைகொண்ட, இலக்கியத் திறனாற்றல் அற்ற சிலர் எனது எழுத்தில் நிறையவே குறைகள் காண்கின்றனராம். அக்காலம் தொட்டு இக்காலம்வரை குறைகள் கண்டுபிடித்து சிலர் பெயர் பெற்றிருக்கிறார்கள்.

இவர்களுக்கு வாக்கியத்தில் பிழைகள் காண என்ன அருகதையுண்டு? ஒரு வாக்கியம் எழுத முடியாதவர்கள், உரைநடைகள் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு எழுத முடியாதவர்கள், ஒரு வசன நூலைக்கூட எழுத முடியாதவர்கள். இப்படியானவர்கள் என்ன சொன்னாலும் எனக்குக் கவலையில்லை.

6424

பேராசிரியர்கள், கலாபூஷணங்கள், பெரும் எழுத்தாளர்கள் திறமையை மெச்சிப் பாராட்டினால் அது போதும்.

ஒன்றுமட்டும் சொல்வேன். பொறுத்திருந்து பாரும். இந்த அமுத வாகனம் எவ்வாறெல்லாம் நகரப் போகின்றது! மூக்கில் விரல் வைக்கத்தான் போகிறீர்க்ள். என்னோடு போட்டியிட்டு நூல்கள் வெளியிட பகல் கனவா காண்கிறீர்கள்?

சிறப்பாக இலக்கியப் பணிபுரிந்தமையால் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பாராட்டப்பட்டு சான்றிதழும் பெற்றேன். எனது ''கூடில்லாக் குருவிகள்'' சிறுவர் கதை நூல் 06.12.2002 கொழும்பு தமிழ் சங்கத்தால் நூல் நயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்போம் நிகழ்வில் பாராட்டப்பட்டது.

நான் நான்கு வரி கவிதைகளுக்குள் மட்டும் நின்றவனல்ல. மெல்லிசைப் பாடல், நாடகம், சிறுகதை, நாவல், கட்டுரை, சிறுவர் இலக்கியம் என்று சகல இலக்கிய வடிவங்களையும் தரக்கூடியவன்; தந்தவன்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றவன். சமாதானம் சஞ்சிகை நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவன். எனது நூல்களை விளம்பரமின்றி, விழாவின்றி விற்க முடிகிறது. சிலர் விழாக்கள் வைத்து விளம்பரம் தேடுகின்றார்கள்; விற்றுக் கொள்ள முடிவதில்லை.

இது எனது எட்டாவது நூல். தற்போதுள்ள படைப்பாளிகளில் குறுகிய காலத்தில் அதிக நூல்களை வெளியிட்டவன் என்ற பெருமையும் எனக்குரியது. அல்ஹம்துலில்லாஹ்! நாடெங்கும் இருந்து என்னூல்களுக்கு அன்பளிப்பு அனுப்பும் அன்புள்ளங்களை என்றும் மறவேன். அவர்களின் உதவி ஒத்தாசையின்றி நூல்கள் வெளியிட முடியாது. எதிரிகள் வாங்காவிட்டால் பரவாயில்லை.

என் திறமை உணர்ந்த சமாதானம் சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் மருதூர்வாணர் எனக்கு ''இலக்கியச் சுடர்மணி'' என்ற பட்டம் தந்து கௌரவித்தார். முப்பது வருடங்கள் எழுதியவர்களே தங்களை பெரும் கொம்பர்களாக நினைக்கின்ற காலகட்டத்தில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை புரிந்த மேலும் சளைக்காது எழுதுகின்ற பிரபல எழுத்தாளர் ஒருவர் என்னை பாராட்டியதை பெரும்பேறாகக் கருதுகின்றேன். இலக்கியமென்றால் என்னவென்று தெரியாதவர்கள் பட்டமளிக்கின்ற வேளை ஒரு பெரும் இலக்கியவாதி பட்டமளித்து கௌரவிப்பது மதிப்பிற்குரிய செயலல்லவா? இதேவேளை தங்களுக்கு தாங்களே பட்டமளித்து மகிழ்கின்ற கூட்டமும் இருப்பது கண்டு வேதனைப்படுகின்றேன்.

தொடர்ந்தும் நூல்கள் வெளியிட்டுக்கொண்டேயிருப்பேன். அடுத்த வெளியீடாக கவிதை அல்லது நாவல் வெளிவரும் என்பதை முன்கூட்டியே சொல்லி வைக்கின்றேன்.

எனக்கு உற்சாகமளிக்கும் அன்பு வாசகர்களை மீண்டும் பாராட்டி விடைபெறுகின்றேன்.

ஒலுவில் அமுதன்

67, புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 05
இலங்கை.
தொ.பே. 067 - 2278339
கையடக்கத் தொலைபேசி அழைப்பு 0777 - 141609

137170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


01. நெருப்பு சாம்பலாகும்.

02. முடிவுரையான முன்னுரை.

03. நேர்மை தவறியபோது...

04. தீர்ப்புகள்

05. பாதைமாறி பயணங்கள்

06. புரியாத நெஞ்சங்கள்

07. இனவெறிகளுக்கு அப்பால்....!

08. நெருப்போடு நெருப்பு

09. தென்னம்பிள்ளையும் பிள்ளையும்

10. தாயின் வழியில்...!

11. எண்ணமெல்லாம் எழுத்தாகுமா?

12. நூலறுந்த பட்டம்

13. அற்புத விளக்கும் மெழுகுதிரியும்



137170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு சாம்பலாகும்

கொல்லன் தெருவில் இரும்பை பழுக்கக் காய்ச்சி அடிக்கும் சத்தத்தைவிட பெரிய சத்தமாக றியாஸின் சத்தம் இல்லா விட்டாலும் கொல்லர்கள் ஓய்வெடுக்கும் வேளை மௌனம் நிலவும். ஆனால் றியாஸின் வாய்மட்டும் ஓய்வெடுக்காது.

அடுப்பில் ஊற்றிய எண்ணெய்போல பொரிந்து கொண்டிருப்பான்.

யாருக்கும் நல்லது செய்யாவிட்டாலும், நல்லது பேசமாட்டான். எவரையாது வார்த்தையால் உரித்துக் கொண்டிருப்பான். அவனிடம் நெருங்கிப் பழகுவோரும் குறைவு. எந்த நேரத்தில் எப்படிப் பேசுவான் என்று சொல்ல முடியாது. சுயநலத்திற்காக உறவினர்களை வருத்தவும் தயங்கமாட்டான். காரியாலயத்தில் அவனுக்கு எழுதுவினைஞர் பதவி. தலைமை அதிகாரியைக் கூட தனக்குக் கீழே பணிபுரிபவராகத்தான் அவன் நினைத்து நடப்பான்.

அன்று சூரியன் உச்சிக்குவராத பகல்வேளை. தலைமை அதிகாரி றியாஸை அழைத்தார்.

‘‘வாறன்’’ என்றவன் இரண்டு நிமிடங்கள் கடந்தும் செல்லவில்லை.

‘‘றியாஸ் நான் கூப்பிட்டா வரவேண்டியதுதானே! நீ என்ன நினைச்சிக்கி இருக்காய். சுறுக்கா வாரும்’’ என்றார் தலைமை அலுவலர்.

‘‘வேலைதானே செய்றன்’’ என்று எதிர்ப்புரை சொன்னான்.

‘‘என்ன வேலையிருந்தாலும் கூப்பிட்ட உடன வரவேண்டியது

64244.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உன் கடமை. தெரியிதா?'' மேலதிகாரி அதிகாரத் தொணியில் பேசினார். வாயைக் கடித்துக் கொண்டு நின்றான் றியாஸ். மேலதிகாரிதான் திரும்பப் பேசினார்.

''இங்கு நான்தான் மெனேஜர். அனுப்ப வேண்டிய ஸ்டேட்மன்ட் எல்லாத்தையும் இன்டைக்கே அனுப்புங்க'' என்றார்.

''வேறு வேலைகளும் இருக்கு......'' என்று இழுத்தான் றியாஸ்.

''நான் உமக்குச் சொல்றன். நான்தான் மெனேஜர். எல்லா வேலையையும் நிப்பாட்டிட்டு ஸ்டேட்மன் அனுப்புங்க. தெரியிதா? மத்த வேலைய நாளைக்குப் பார்க்கலாம். உன்ர விருப்பத்திற்குச் செய்றென்டா உனக்கு ரான்ஸர் தாறன்'' என்றார் மேலதிகாரி. றியாஸ் வாய்மூடி வந்து மேலதிகாரி இட்ட பணியைச் செய்தாலும், வாய் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

''மனேஜராம். நாங்க எடுபிடிகளா? நாங்க வேலையைச் செய்துதானே முடிக்கணும்'' பக்கத்திலிருக்கும் ஊழியர் அப்துல்லாவின் காதிலும் இது விழுந்தது.

''டேய் உன்ட விருப்பத்திற்கு வேல செய்ய நீயாரு? மெனஜேர் சொல்ர வேலையைச் செய். கிளாக்கென்றால் கிளாக்காயிரு'' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது அப்துல்லாவிற்கு. றியாஸ் நம்மை பதம்பார்க்கத் தொடங்கிவிடுவானென்று பேசாமலிருந்தான்.

ஒரு நாள் பகல்போசன வேளை. எழுதுவினைஞர்கள் எல்லோரும் கூடி உணவுண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். இன்று அலசப்பட்ட விடயம் அரசியல். சம்பந்தப்பட்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

''முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகள் நிறைந்த கட்சியல்ல. இம்முறை தோல்வியடையும் என்றாயே! றியாஸ் இப்ப எப்படி முஸ்லிம் காங்கிரஸ் ஏறிவருகுது'' என்றான் அப்துல்லா.

''செருப்படி கட்சியும், செருப்படி ஆட்களும்'' என்று கீழ்த்தரமான வார்த்தை பேசினான் றியாஸ். அப்துல்லாவுக்கு ஆத்திரம் முளைத்தது.

''மரியாதையில்லாமப் பேசிறாயே! தேர்தலுக்கு முன்னேயும் கீழ்த்தரமாப் பேசினாய். கேட்டுக்கிருந்தன். இனியும் கேட்கமாட்டன் மடப்பயலே. முஸ்லிம்களின் கட்சி முஸ்லிம் காங்கிரஸ் என்பது தெளிவாகிவிட்டது. இப்ப ஏன் செருப்புக் கதை கதைக்கிறாய்? உன்ர எம்.பியைப் போல நேரத்திற்கொரு கட்சியில் தொங்கிறவங்க அல்ல எங்க தலைவர்மார். முஸ்லிம் மக்கள் மதிக்கிற கட்சி'' என்றான் அப்துல்லா.

ஏதேதோ சொல்ல வாயெடுத்து வார்த்தையின்றி எரிக்கும் கண்களால் பார்த்தார் றியாஸ். உண்மைக்கு முன் உரைக்க வார்த்தையில்லைத்தானே.

வேறொரு சந்தர்ப்பத்தில் அப்துல்லாவுக்கு செம்மையாக கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தவனாய் சாப்பிட்டு விட்டுச் சென்றான் றியாஸ்.

பிற்பகல் மூன்று மணியைத் தாண்டியிருந்த வேளை சிவராம் தனிப்பட்ட விடயமாக றியாஸை நாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''றியாஸ் விடயத்தை மறந்து போனீரா? இன்றைக்கு மூன்றரை மணிக்கு வீட்ட போகனும். மகனுக்குச் சுகமில்ல. பெரியவரிட்ட சொல்லி பெமிஸன் எடுத்திட்டன். என்ர வேல கொஞ்சம் கெடக்கு முடிச்சிப்போடு. நீ அடிக்கடி நேரத்தோட போவாய். அப்பெல்லாம் நான்தானே உன்வேலைய முடிப்பன்" என்றார் சிவராம்.

''இன்டைக்கு எனக்கு வேல மிச்சம் கூடயாயிருக்கு. கோபப்படாத! இன்டைக்கென்டா என்னால எதுவும் செய்யேலா" என்று கூறி கைவிரித்தான் றியாஸ். எப்போதாவது யாருக்காவது உதவியிருக்கிறானா? இல்லையே!

''உன்னத் தெரியும். கேட்டுப்பாத்தன். யாருக்காவது நீ உதவி செஞ்சிருக்கயா? தேவையில்லாத கதைமட்டும் கதைக்க யிருக்காய். விவாதிக்கயிருக்காய். தகுதியில்லாத அரசியல் வாதிக்கு வக்காலத்து வாங்கயிருக்காய். இதையும் மாற்றிக் கதைக்கிறவன் நீ. உமக்கு நல்லதும் தெரியா. நல்வர்களும் தெரியா. என்ர வேலைய நாளைக்கு வந்து செய்றன்" என்று கூறி பதிலுக்கும் காத்திராமல் போய்விட்டான் சிவராம்.

றியாஸிற்கு இப்போதுதான் தவறு தெரிந்தது. 'எனக்கு உதவி புரிபவனல்லவா! இனி எனக்கு யாரும் அவசரத்திற்கு உதவமாட்டாங்க' என்று றியாஸ் உணர்ந்தாலும் அவனது கெட்டமனம் அதன் செயல் என்றும் மாறாது. அந்த அலுவலகத்தில் யாருக்கும் உதவாத, யாரையும் மதியாத ஒரு பிறவி றியாஸ். கெட்ட உருவத்தின் மொத்த வடிவம்.

எவரையும் மதிக்காத றியாஸ் அலுவலகத்தில் தனிமரமானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்கும் வாயால் எல்லோரினதும் எதிர்ப்பைச் சம்பாதித்தான்.

''நல்லவர்களோட சேர்ந்து பழகாவிட்டாலும், நல்லது பேசமுடியாத நிலையிருக்கிறதே இதுதான் இந்தளவு எதிர்ப்பை றியாஸிற்கு உருவாக்கியது. இதையெல்லாம் அவன் எண்ணிப் பார்க்கின்றானா? என்பது சந்தேகம்தான்! தீயவர்கள் இதையெல்லாம் என்று எண்ணிப் பார்க்கின்றார்களோ அன்று உலகம் உருப்படும். தீயவன் தீயவற்றை விதைத்துக் கொண்டேயிருக்கிறான். நல்லவர்களை வதைத்துக்கொண்டே யிருக்கிறான்'' எனப்பல எண்ணினான் அப்துல்லா.

அன்று றியாஸிற்கு வழமையைவிட அதிக வேலை. மற்றவர்க ளிடம் உதவி கேட்க முடியாத நிலமை. மற்றவர்கள் உதவி செய்தமைக்கு நன்றி மறந்தபோது யார்தான் உதவ முன்வருவர்? மூச்சுக்கூட விட முடியாத வேலை. முடித்துவிட்டு நிமிரும்போது அலுவலகத்தில் பீயோனும், காவலாளியும்தான் இருந்தார்கள்.

தினக்குறிப்பை எடுத்துக்கொண்டு பஸ்தரிப்பிடத்திற்கு ஓடினான். ஏழுமணி பஸ் போய்விட்டது.

'இன்னும் ஒரு மணித்தியாலம் அடுத்த பஸ் வரும்வரை பஸ்தரிப்பில் நுளம்புக் கடியை சகித்துக்கொண்டு நிற்க வேண்டுமே' என்று மட்டும்தான் றியாஸ் எண்ணினான்.

தீயவன் தீய்ந்து கொண்டே போகின்றான். நல்லவன் வளர்ந்து கொண்டே வருகின்றான். எண்ணத்தை பொறுத்து செயல் தொடரும்.

137170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரையான முன்னுரை

கடும் குளிர் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது. நன்றாக தூங்கிக்கொண்டிருக்கும்போது போர்வைக்குள் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தது. ருஸானா போர்த்தி போர்த்தி அலுத்துப் போய்விட்டாள். குளிர்வென்று விட்டது.

திருமணம் செய்து ஒருவருடம்தான். இதற்கிடையில் கணவனை பிரியும் நிலை வரும் என்பதை கனவிலும் அவள் நினைக்கவில்லை. நிரந்தர பிரிவல்ல. அனுராதபுரத்தில் சிங்கள கிராமத்திற்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளான் அவளது கணவன் பாயிஸ். மாத முடிவில் வருவான். இரண்டு நாட்கள் நின்று விட்டுப்போவான்.

''இங்கு தொழில் செய்ய பாருங்க'' என்று ருஸானா பலமுறை சொல்லி இருக்கிறாள்.

''இங்க தொழில் செய்யிறண்டா அதற்கு மூலதனம் போதா. வேற தொழிலை செய்தாலும் பொறாமை பிடிச்சவங்க இருக்காங்க. அதனால எதுவும் செய்யேலா...'' என்றான் பாயிஸ்.

''அனுராதபுரத்திலுள்ள முதலாளி உங்களுக்கு நல்ல சம்பளம் தாரார். ஊரோட தொழில் செய்தா நல்லம் என்டு பாக்கன்'' என்றாள் ருஸானா. கணவன் பாயிஸ் ஏதோ சொல்ல வாயெடுத்தவன் பின்னர் மூடிக் கொண்டான்.

137170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தொழில் மட்டுமா? என்னோடு கடையில் வேலை பார்க்கும் சோமாவதியும் ஒரு காரணம். அவளின் பட்டுக் கன்னங்கள், பளபளக்கும் உதடுகள்... சாந்தமான பேச்சு, குளிர்ந்த பார்வை. இவைகளும்தான் காரணம். என்னை விரும்புகிறாள் என்பதை அவளோடு பேசியவேளை அறிந்துகொண்டேன். நான் திருமணம் செய்ததுதான் எல்லாவற்றுக்கும் தடையாகியது. இல்லையென்றால்...'' என்று பாயிஸ் சிந்தித்தபோது

''என்ன யோசனை பலமா இரிக்கி'' என்று குறுக்கிட்டாள் ருஸானா.

''அப்படி ஒன்றுமில்லை. நாளைக்கு அனுராதபுரத்திற்கு போகணுமே. அதான் யோசிச்சன்'' என்றான் பாயிஸ். அன்றிரவு தூங்கும்போது சோமாவதியின் நினைவு வந்தது. மனைவி அருகில் தூங்குவதையும மறந்து சிந்தித்தான்.

அது ஒரு மாலை வேளை. வாடிக்கையாளர்களின் வருகை குறைந்த நேரம். பாயிஸ் சோமாவதி அருகே சென்று அமர்ந்தான்.

''நான் திருமணம் செய்யாதிருந்தா உங்களை என்ன செய்வேன் தெரியுமா?'' என்று கூறி சோமாவதியின் கன்னத்தை கிள்ளினான்.

''இனி இதெல்லாம் சரிவராது. இந்த வேலையை பொண்டாட்டிக்கிட்ட வச்சுக்குங்க. திருமணம் செய்தா கதை முடிஞ்சுது. முன்னரைப் போல வாலாட்ட முடியா'' என்றாள் சோமாவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் அவளோடு கதைப்பதிலும் பழகுவதிலும் இன்பம் கண்டான் பாயிஸ். மனைவியை பிரிந்திருக்கும் வேளையில் தனிமையிலும் இனிமையை ஏற்படுத்தியது சோமாவதியின் உறவு. அவள் விலகிச் சென்றாலும் விடுவதாக இல்லை. இதனை எண்ணி பெருமூச்சு விட்டான்.

‘‘இன்னும் தூங்கலியா? என்ன யோசனை?’’ விடயம் புரியாத மனைவி ருஸானா கேட்டாள்.

‘‘தலைவலியா இருக்கு’’ என்று பொய் சொன்னான்.

‘‘டிஸ்பிரின் ரெண்டு குடிச்சிட்டு படுங்களன்’’ என்றாள் ருஸானா. அவள் வற்புறுத்தவே டிஸ்பிரின் ஒன்றை மட்டும் எடுத்து விழுங்கிவிட்டு படுத்தான். விடிந்தால் அனுராதபுர பயணம். நீண்ட நேரத்தின் பின்னர் உறங்கினான்.

அப்போது ருஸானாவின் பெற்றோர் அவளுக்கு எங்கெல்லாம் மாப்பிள்ளை பார்த்து அலைந்தார்கள். அலுவலக பியூன் வேலை செய்பவனும் லட்சக் கணக்கில் சீதனம் கேட்டதால் அரசாங்க தொழில் புரிபவனை அவளுக்கு மாப்பிள்ளையா க்கும் எண்ணம் கை நழுவியது.

ஈற்றில் வெளிநாடு சென்றுவந்த ஒருவனின் வீட்டிற்கு படையெடுத்தார்கள் ருஸானாவின் பெற்றோர். நான்கு வருடங்கள் நின்று வந்தவன். நல்ல பொருட்கள் பல கொண்டு வந்திருந்தான். அழகான வேனும் வாங்கி இருந்தான். இவற்றைக் கண்டு எப்படியாவது மகள் ருஸானாவிற்கு இவனை மாப்பிள்ளையாக்கிட வேண்டும் என்று கங்கணம் கட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்தான் இந்த பாயிஸ். மீண்டும் வெளிநாடு சென்று உழைத்து வரக்கூடிய உடல் வலு இல்லாதவன். நோயாளியும் கூட. வேனை முதலாகக் கொண்டு உழைப்பதைத்தவிர வேறு வழி இல்லாதவன். பாயிஸ் நோயாளி என்பதை அவனது பெற்றோரும் மறைத்தார்கள். ஐம்பதினாயிரம் பணமும், இரண்டு ஏக்கர் காணியும், வீடும், வளவும் சீதனமாக பெற்று திருமணம் செய்தான்.

வாழ்க்கை ஆறு மாதங்கள் சுமாராக போய்க்கொண்டிருந்தது. கையிலுள்ள பணம் கரைந்தது. இதேவேளை மீண்டும் நோயால் பீடிக்கப்பட்டு கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

வைத்தியச் செலவுக்காக வேன் விற்கப்பட்டது. நோய் சுகமாகி வீடு வந்தான். என்ன தொழில் புரிவதென புரியாது வீட்டிலேயே இருந்தான்.

முதல் இல்லாமல் புரியும் தொழில் எம் நாட்டில் இல்லையே! ஓடி ஆடி உழைக்கவும் உடம்பில் தெம்பு இல்லை. பாயிஸ் என்ன செய்வான்? அவனுக்கு தெரிந்த அனுராதபுர முதலாளிக்கு கடிதம் போட்டான். அவனுக்கு அங்கே வேலை கிடைத்தது. இன்றுவரை அங்குதான் வேலை செய்கிறான்.

பாயிசை பிரிந்து மாதக்கணக்கில் இருப்பது ருஸானாவிற்கு வருத்தமான விஷயம்தான்! வேறு வழி இல்லையே!

வசதியாக இருப்பவனை திருமணம் செய்து தந்ததாக பெற்றோர்கள் சொன்னார்கள். இப்போ எல்லாமிழந்து இன்னொருத்தனிடம் வேலை செய்கிறார். இனி என்ன செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்? பாயிஸை உதறித்தள்ளினால் உதவாக்கரையாகி தனியாக வாழ வேண்டி வரும் என பலவாறு சிந்தித்த வண்ணம் இருந்தாள் ருஸானா.

''என்ன தங்கச்சி கவலையாக இருக்கீங்க'' கேட்டவாறு வந்தான் ருஸானாவின் நானா முபாரக்.

''அவரு மாசக்கணக்கில வராம இருக்கார். நான் தனியாக இருந்து கஷ்டப்படுறன். உப்பு புளி வாங்கிறதே கஷ்டமாயிருக்கு. நோயால கையில இருந்த முதலையும் விட்டிட்டு நிக்கார். மாசத்திலே ரெண்டு நள் நின்னுட்டு போறார். இஞ்ச யார்ர கடையிலாவது பேசி நிப்பாட்ட ஏலாதா?'' என்று கேட்டாள் ருஸானா.

''அது கஸ்டம் தங்கச்சி. எல்லோரும் அவனவன்ட சொந்தக் காரனத்தான் கடையில வச்சிருக்காணுகள். ஆஸ்மா நோயாளியா இருப்பதாலே மச்சானுக்கு பெரிய வேலைகளும் செய்ய ஏலா. மச்சானும் நோயாளி எங்கிறதை அப்ப மறைச்சிட்டார். வேற வழி இல்ல. மனிசன் வருஷக்கணக்கிலே சவூதியிலேயும் நிக்கானுகள்தானே. மச்சான் மாத்தைக்கு ஒருக்கா வந்து போறார்தானே'' என்று ஆறுதல் கூறினான்.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் தலைவிதியை நொந்து கொண்டாள் ருஸானா.

பாயிஸ் தன்னோடு விற்பனையாளராக கடமையாற்றும் சோமாவதியுடன் குரங்குச் சேஷ்டை பண்ணுவதை விடவில்லை. வலியச் சென்று வம்புக்கிளுப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று யாரும் கவனியாத நேரம் பார்த்து சோமாவதியின் கரத்தைப்பற்றி முத்தமிட்டான். அவ்வேளை சக ஊழியர் முருகதாஷும் கண்டு கொண்டான். அவன் கண்ணுற்றதை சோமாவதியும் கண்டுகொண்டாள். அவளை வெட்கம் பிடித்து விழுங்கியது.

''முருகதாஸ் நினைக்கலாம் நானும் இந்த ஊடலை விரும்புகிறேன் என்று. திருமணம் செய்த பிறகு பாயிஸ் இந்த விளையாட்டை விட வேண்டியதுதானே. தேவையேற்பரின் மேலும் இரண்டு மூன்று நாட்கள் மனைவியோடு இருந்துவிட்டு வரவேண்டியதுதானே! இவரின் சேட்டைகளுக்கு விட்டுக் கொடுத்தால் என் எதிர்காலம் பாதிக்கப்படலாம். இன்றைக்கு பின்னேரம் முதலாளியிடம் சொல்லி ஒரு முடிவு எடுக்க வேண்டும்'' என்றிருந்தாள் சோமாவதி.

விடயம் புரியாமல் குதூகலத்தில் குதித்துக் கொண்டிருந்தார் பாயிஸ்.

முதலாளியிடம் எல்லாவற்றையும் விளக்கமாக சொல்லிவிட்டு வந்தாள் சோமாவதி. சிறிது நேரத்தில் ''பாயிஸ் இங்கே வா'' என்றழைத்தார் முதலாளி. ''வாங்க'' என்ற பண்மையில் அழைக்கும் முதலாளி ஒருமையில் அழைத்ததும் பயந்துபோய் முதலாளியின் முன் தோன்றினான் பாயிஸ்.

''உங்க கூத்தெல்லாம் தெரியா என்று நெனைக்காதீங்க. சோமாவதி அடிக்கடி சொல்லி வாறாள். அவள் திருமணம் செய்யாதவள். அவளும் வாழணும். உனக்கு பொண்டாட்டி இரிக்கா. திருந்துவாய் எண்டு பார்த்தா அது நடக்கமாட்டாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருக்கு. இந்த மாதம் இருபது நாட்கள் வேலை செஞ்சிருக்காய். ஒரு மாதச்சம்பளம் இந்தா பிடி. இனி ஊருக்கு போயிடு. அங்கே போய் தொழிலை பாரு. அதுதான் நம் இருவருக்கும் நல்லது" என்றார் முதலாளி.

வார்த்தையின்றி வாடி நின்றான் பாயிஸ். பணத்தைப் பெற்றுக் கொண்டு சோமாவதியை திரும்பியும் பாராது பாதையில் இறங்கிச் சென்று அம்பாறை பஸ்ஸில் ஏறி அமர்ந்தான்.

மனைவியிடம் பொய் சொல்லி தப்பிக்கலாம். ஆனால் அவன் இனி என்ன தொழில் செய்வான்? யாரிடம் போய் கேட்பான்?

நவமணி

26.05.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை தவறியபோது...

உச்சி வெயில் கனகசபைக்கு தலை வெடிக்கும் போலிருந்தது. என்றாலும் அவன் வீடு செல்ல முடியாது. போடியார் சொல்லிவிட்டார். ''மூணு மணிக்கு பொறவுதான் ஊட்ட போகணும். அது வரைக்கும் வயல்ல நிற்கணும். பக்கத்து வயக்காரர்கள் நம்ம வயலுக்கு பாய்கிற தண்ணியை வெட்டி கொண்டு போயிடுவானுகள்'' என்று.

பசி வயிற்றை பதம் பார்க்கத் தொடங்கியும் அசைய முடியாது நின்றான். ஐந்து மாதங்களுக்குரிய தொழிலல்லவா?

''இங்குள்ள போடிமார்கள் அதிகம் விளைய வேண்டும் என்பதற்காக விதம் விதமான கிருமிநாசினிகள், பலவிதமான களைநாசினிகள், உரவகைகள் விசிறுவார்கள். பணத்தைப் பற்றி கவலைப்படாமல் செலவு செய்கிறார்கள்.

எங்களைப்போன்ற தொழிலாளிகளுக்கு, இரவு பகலாக கஷ்டப்படும் எங்களுக்கு ஒரு பிடி நெல்மணிகூட அன்பளிப்பாக தரமாட்டார்கள். என்றெண்ணியவாறு பறனில் ஏறி அர்ந்தான் கனகசபை.

நேரமும் விரைவாகத்தான் போய்க்கொண்டிருந்தது. பக்கத்து வயற்காரன் வருவது தெரிந்தது கனகசபைக்கு.

வயற்காரனாக இருந்தாலும் விலையுயர்ந்த கடிகாரம் கையில்

64244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்திருந்தான். சவூதியில் பணிப்பெண்ணாக கடமையாற்றும் அவனின் மனைவி அனுப்பி வைத்ததாம்! மாதாமாதம் மனைவி அனுப்புகின்ற பணம் அவனுக்கு போதும். மனைவியின் சம்பளத்தில் வாழ்கிறான் என்று ஊரவர்கள் சொல்வார்களே! அதற்காகத்தான் தொழில் செய்கிறான்.

‘‘ஏய்.... மச்சான் நேரம் என்ன?'' என்று கேட்டான் கனகசபை.

‘‘மூன்று பத்து'' என்றான் பக்கத்து வயற்காரன்.

‘‘நேரம் சரி. நேராக போடியாரின் வீட்டுக்குப்போய் இப்பதான் வாறன் என்பதை காட்டிப்போட்டுத்தான் என்ர வீட்ட போகனும்'' என்று நினைத்தவாறு பரசுராமன் போடியாரின் வீட்டுக்கு போனான் கனகசபை.

‘‘போடியார், போடியார்'' வெளிக்கதவில் தட்டினான் கனகசபை.

‘‘இப்பதான் வாறியா? என்ன சேதி?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் பரசுராமன்.

‘‘யாரும் வரல்ல. இரவைக்கு யாரும் தண்ணிய வெட்டி விடுவான்களோ தெரியாது. போடியார் இந்தமுறை அறுவடையின்போது ஒரு மூடையாவது அதிகமா தரணும். பக்கத்து வயற்காரனுகள் இண்டு மூன்ற மூடைகள் அதிகமா கொடுக்கேக்க எனக்கு ஒரு மூடையாவது தாறீங்க இல்லியே! இந்த முறை கட்டாயம் தரணும்'' என்றான் கனகசபை.

‘‘அதெப்படி? உன்ட கூலிய சரியா கணக்கு பார்த்து தாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே! மிச்ச சொச்சமெல்லாம் நான் தரமாட்டன். இந்த கூலிக்கு செய்ய முடியாட்டி நீ போகலாம். எத்தனையோ பேரிருக்கானுகள்" எடுத்த எடுப்பிலே உச்சிக்கு போய்விட்டார் போடியார் பரசுராமன்.

போடியார் என்றால் இப்படித்தான் போலும் என்று நினைத்த கனகசபை "மற்ற போடிமார் கொடுக்கிறாங்க என்று சொன்னன். விரும்பாட்டா விட்டிடுங்க நான் ஊட்டபோய் வேலைகளை முடிச்சிற்று ராவைக்கு காவலுக்கு போறன்" என்று கூறிச் சென்றான் கனகசபை.

"பரசுராமன் போடியார் உலோபித்தனமும் நிறைந்தவர். மார்க்கட்டுக்கு போனாலும் சின்ன மீன்கள்தான் பார்த்து வாங்குவார். ஆட்டிறைச்சி கடைப்பக்கம் எட்டியும் பார்க்க மாட்டார். காய்கறிகள் விட்டமின் நிறைந்தது என்று சொல்லி அதிகமாக வாங்குவார். இப்படி உழைத்ததை தனக்கோ மனைவி மக்களுக்கோ அதிகமாக செலவு செய்யாத பிறவி. தொழிலாளிகளுக்கு அன்பளிப்பாக நெல் மூட்டை வழங்குவார் என்பது நடக்கிற விஷயமா?" என்றெண்ணியவாறு வீட்டை அடைந்தான் கனகசபை.

'இரவு பகலாக பாடுபடும் எனக்கு நன்றிகாட்டக்கூடிய ஒரு போடியார் கிடைத்தால் அவரிடம் போய் வேலை செய்ய வேண்டும்! என்று முடிவாக தீர்மானித்திருந்தான் கனகசபை.

நாட்களும் மாதங்களும் விரைவாகத்தான் நகர்ந்தன. பரசுராமனின் வயலில் நெல்மணிகள் குலை குலையாக காய்த்து குலுங்கின. அடுத்தமாத இறுதியில் அறுவடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடிய நிலையில் இருந்தது.

தனது பராமரிப்புத்தான் விளைச்சலுக்கு காரணம். வயற்காரனின் இரவு பகல் பாராத அயராத முயற்சியே முக்கிய காரணம் என்பதை எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டார்.

பக்கத்துவயல் போடிமாருக்கு நீர் அரும்பாக கிடைத்திருந்தாலும் விளைச்சலில் குறை ஏற்படவில்லை. பரசுராமனின் வயலோடு போட்டி போட்டுத்தான் விளைந்திருந்தன.

பக்கத்து வயல்கள் பரசுராமனின் அறுவடைக்கு பின்னர்தான் அறுவடை செய்யக்கூடியதாக இருக்கின்றன. நாட்கள் நகர்ந்தன. இன்னும் ஒருவாரத்தில் பரசுராமனின் வயல் அறுவடை செய்யப்பட விருக்கின்றது. பூத்துக் குலுங்கும் நெல்மணிகளைப் பார்த்து பூரிப்பெய்தினார் பரசுராமன்.

வானம் இருண்டது. இடி வானைப் பிளந்தது. மின்னல் தெறித்தது. மழை சோவென பொழிந்தது.

''தொடர்ந்தா பொழியப் போகிறது? சில நிமிடங்கள்தான் பெய்யப்போகிறது'' என நினைத்தார் பரசுராமன். விடிய விடிய வெழுத்து வாங்கியது. அதிகாலை எழுந்து வீட்டின் முன்னால் போகும் பாதையை நோக்கினார். ஆறுபோல நீர் ஓடிக்கொண்டிருந்தது.

வயலில் எப்படி இருக்குமோ? என்றெண்ணியவர் மோட்டார் சைக்கிளை எடுத்து உதைத்து வேகமாக முறுக்கினார். பதினைந்து நிமிடங்களுக்குள் வயலுக்கு போய் சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்புக்கு மேலால் தண்ணீர் ஆறாக ஓடியது. நெற்கதிர்கள் தண்ணீருக்கு கீழே படுத்திருந்தது உயிரற்ற உடல்போல. போடியார் பரசுராமனுக்கு வேதனை நெஞ்சை இறுக்கியது. கனகசபை மண்வெட்டியோடு போராடி போராடி தோற்றுப்போனார்.

மழை நிற்காமல் தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது.

''போடியார் எப்படி வெட்டியும் பயனில்லை. எல்லா இடத்திலும் வெள்ளம். மழை பேஞ்சு கொண்டே இருக்கு'' என்றான் கனகசபை. பரசுராமனுக்கு எதுவும் பேசவரவில்லை.

மூன்று நாட்களும் தொடராக மழை பெய்தமையால் நெற்கதிர்கள் அள்ளுப்பட்டு போயின. தலை இல்லா முண்டமாக வயல்கள் காட்சியளித்தன.

''கனகசபை ஒரு மூடை மேலதிகமாக கேட்டதற்கு இணங்காததினால் வயலோடு போய்விட்டது, என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார் பரசுராமன். அடுத்த முறை வயலால் நிறைவாக பெற்றால் இரண்டு மூடையாவது கனகசபைக்கு மேலதிகமாக கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தவராக வீடு சென்றார்.

நவமணி 15.06.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்புகள்

வாழ்வதற்காக ஒரு திருமணம் ஆணுக்கோ பெண்ணுக்கோ அவசியம். துணையாக வருகின்ற பெண் ஆணுக்கு சுமையானால் வாழ்வதைவிட பிரிவதே மேல்.

அவள் பிரிவதற்காக திருமணம் செய்யவில்லை. வாழ வேண்டும் என்பதற்காக எவ்வளவோ சுமைகளை தாங்கி பார்த்திருக்கின் றாள். வாழ்க்கையின் அர்த்தமே இல்லாதபோது தான் பிரிந்தாள். அனஸ் பொழுது போக்கிற்காக திருமணம் செய்தி ருக்கிறான். அவனது மனைவி ருமைஸா அன்பின் வடிவம். பணிவின் உருவம். இப்படியானவள் கிடைப்பதற்கே தவம் கிடக்க வேண்டும்.

"இனி நான் பிரியப்போகிறேன். அவளோட வாழ ஏலா" என்றான் அனஸ்.

"ஏன்டா நீ சொல்ற? இப்படியான அன்பு மனைவி கிடைப்பதே பெரிய காரியம்டா. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பாங்க இதுக்குத்தான். அன்பான மனைவி. சும்மா பிரிய நினைக்காதே" என்றேன் நான்.

"அவளோட வாழத்தான் நெனைச்சேன். எனக்காகத்தான் அவளும் என்னோட வந்தா. ஆனா.... அவட பெற்றோர் எங்களை வந்து கூட்டிப் போறாங்க இல்லியே. காசு பணம் இல்லாம எப்படி வாழ்ற? அவட பெற்றோர் சீதனம் தருவாங்க என்டா வாழலாம். வெறும் கையோட எப்படி வாழ்க்கை நடத்துற?" என்று முட்டாள்தனமாக பேசினான் அனஸ். எனக்கு கோபம் கோபமாக வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சீதனத்துக்குத்தான் வாழ்ற என்றிருந்தா அவளை நீ கூட்டி வந்திருக்க தேவல்ல. உன்னை நம்பி வந்தவளை வைச்சு குடும்பம் நடத்த வேண்டியது உன் பொறுப்பு. இப்ப முட்டாள்தனமா பேசாதே. ஒரு பெண்ணை கெடுத்ததுமில்லாம நடுரோட்டிலயும் விட்டா அவள்ட எதிர்காலம் என்ன? எப்படி வாழ்வாள் என்டு நெனச்சு பார்த்தியா?'' நான் கேட்டேன்.

''பாரிஸ்... கையிலே எதுவும் இல்லாம எப்படி தொழில் செய்யிற?'' அனஸ் கேட்டான்.

''தொழில் செய்ய முடியாத நீ ஏன் திருமணம் செய்தே? பொம்புளையை வைச்சு குடும்பம் நடத்த முடியாத உனக்கு என்னத்துக்கு வாழ்க்கை?'' என்றேன் நான்.

''நெருங்கிய நண்பனாக இருந்து எனக்கு எதிராக பேசிறியே பாரிஸ்'' என்றான் அனஸ்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''நண்பனுக்காக பேசிறவனல்ல நான். நியாயத்தை பேசிறவன். அப்பன் என்றாலும் நியாயத்தைத்தான் பேசுவன்'' என்றேன்.

அதற்குப் பிறகு அனஸ் என்னோடு அவ்வளவு உறவில்லை. கண்டால் இரண்டு வார்த்தைகள் பேசுவான்.

ருமைஸாவின் தந்தை பணக்காரன் என்பதற்காகவே தூக்கி வந்து திருமணம் செய்திருக்கிறான். திருமணம் செய்த பிறகு ஆதரிப்பார்கள். சொத்தில் பாதி கேட்கலாம் என்று நினைத்திருக் கின்றான் அனஸ். ஆனால் ருமைஸாவின் தந்தையது ஆத்திரம் அடங்காமல்தான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வீட்டைவிட்டு ஓடியவள் என் மகள் இல்லை'' என்று ஒரு பிடியாக நின்று விட்டார். அனஸின் எதிர்பார்ப்பு நிறைவேறாமை யால் ருமைஸாவை கைவிடும் முடிவுக்கு வந்துவிட்டான். இந்த மூர்க்கத்தனமான செயலை நான் எப்படி ஆதரித்து பேசுவேன்.

அவனை நம்பித்தானே சொத்து சுகங்களை உதறிவிட்டு வந்தாள். அப்படி நம்பி வந்தவளை நட்டாற்றில் விட்டுவிட்டு போகப்போகிறான் என்று அனஸ் சொன்னதை என்னால் ஜீரணிக்க முடியாது. ருமைஸா நமது சகோதரியாக இருந்தால் எவ்விதம் ஆத்திரம் வரும்?

இப்போது அனஸின் வீட்டுக்குப்போவதை தவிர்த்துக்கொண் டேன். அவனின் தற்போதைய நடைமுறைகளை பார்க்கும்போது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அப்பாவிப் பெண்ணான அவனது மனைவி ருமைஸாவை அவளின் பெற்றோரின் வீட்டுக்கு போகச் சொல்லி இருக்கிறான். அவள் எப்படி போவாள்? கொடுக்கின்ற தண்டனைகளை அனுபவித்துக் கொண்டு இருந்திருக்கிறாள். இவனை நம்பி வீட்டைவிட்டு வெளியிறங்கி ஏன் வந்தேன் என்று அவள் நினைத்திருக்கக் கூடும். இனி என்ன செய்ய முடியும்? துன்பத்தை அனுபவித்தாவது மானத்தை காப்பாற்ற நினைத்தாள். ஆனால்.!

திருமணம் செய்து அவனது பெற்றோரின் வீட்டில் மனைவி ருமைஸாவோடு வாழ்ந்து வந்த அனஸ் பெற்றோரின் வீட்டுப் பக்கம் போவதையே நிறுத்திக் கொண்டான்.

விஷயத்தை கேள்விப்பட்டதும் வேதனையுற்றேன். ருமைஸா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுமின்றி புருஷனுமின்றி மிக வேதனையில் இருந்தாள். அனஸ் இவ்விதம் செய்வான் என்றிருந்தால் கடைசி வரையும் ருமைஸா இவனை நம்பி வந்திருக்கப் போவதில்லை. நம்பி ஏமாந்தாள்.

அனஸ் செய்த அநியாயம் அவனது பெற்றோருக்கும் துயரத்தை ஏற்படுத்தியது. ''திருமணம் செய்யாது விட்டிருக்கலாம். திருமணம் செய்யதுவிட்டு கைவிட்டு போவது நல்லதல்ல. அவனை வீட்டுக்கு வரச் சொல்லுங்கள்" என்று அவனது தாய் நண்பர்களிடம் சொல்லி அனுப்பினாள். அனஸ் வந்தால்தானே.

நெஞ்சிலே துயரத்துடன் நிதமும் அழுகையோடு இருந்தாள் ருமைஸா.

அவளால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. பசிதீர உண்ண முடியவில்லை. நாளை வருவான். நாளை வருவான் என்றிருந்தவளுக்கு நம்பிக்கையும் இல்லாமல் போய்விட்டது.

வெளிநாடு செல்வதற்கான ஆயத்தங்கள் செய்வதையும் விரைவில் அவன் செல்லப் போவதையும் அவனின் நண்பர்கள் வந்து ருமைஸாவோடு கூறினார்கள். அவளது இதயம் வெடிக்கும்போல இருந்தது. முதல் சம்பளத்திலே அனுப்பி வைப்பதாக நண்பன் ஒருவனிடம் பணம் பெற்றிருந்தான் அனஸ்.

ஒருவாரமாக அனஸின் தாயார் கொடுக்கும் உணவுகளை பசி தாங்க முடியாமல் சிறிது சாப்பிட்டு வந்தாள் ருமைஸா.

ஒரு வார முடிவில் அனஸின் நண்பன் ஒருவன் மூலமாக அறிந்து கொண்டாள் அனஸ் சவூதி சென்றுவிட்டான் என்பதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாவமும் அறியாத ருமைஸாவை கெடுத்துவிட்டு சென்ற பாவம் இருக்கிறதே அது அனஸை என்றும் வாழ விடாது.

''இப்படி நட்ட நடு வீதியிலே விட்டுச் சென்ற அனஸ் இனி என்னோடு வாழ விரும்பமாட்டான்'' என்பதை தெரிந்து கொண்டாள் ருமைஸா. எவ்வாறு பெற்றோரின் வீட்டுக்குச் செல்வது? எவ்வாறு தாய் தந்தையை சமாளிப்பது என்பதில் கவனம் செலுத்த முற்பட்டாள்.

அனஸின் பெற்றோர் வீட்டுச் சாப்பாடு அவளுக்கு சாப்பிட முடியாது. வயது வந்த பெற்றோர்கள் அவர்களுக்கு இயலுமான கறிபுளி வாங்கித்தானே சமைப்பார்கள்.

ருமைஸாவின் பிரிதாப நிலையுணர்ந்து அவளை சந்திக்க அவளது சிறிய தந்தை கபூர், அனஸின் பெற்றோர் வீட்டிற்கு சென்றிருந்தார். ருமைஸாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

''உன் பிள்ளை இப்படி செய்திருக்கக் கூடாது. இப்படி கோழைத்தனமானவனுக்கு பெண் எதற்கு?'' என்று அனஸின் தாயாரைப் பார்த்துக் கேட்டார் ருமைஸாவின் சிறிய தந்தை.

ருமைஸாவைப் பார்த்து 'ஏன் மகள் வாழத்தெரியாதவனை நம்பிவந்தே?' நல்ல சாப்பாடும் இல்லாம மெலிஞ்சும் பெயித்தாய். நான் போய் உன் வாப்பாவை சரிக்கட்டிற்று நாளைக்கு வாறன் இரு'' என்று கூறி போய்விட்டார்.

அடுத்தநாள் வந்து ருமைஸாவை அழைத்துச் சென்றார். தந்தை ஒரு புறம், தாய் மறுபுறம் சகோதரி ஒரு புறம் ருமைஸாவுக்கு மிக கீழ்த்தரமாக ஏசினார்கள். ருமைஸா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் பேசவில்லை. தீயவனை நம்பிச் சென்றதும் ஒரு தவறுதான்! தவறு செய்தவர் மௌனமாகத்தானே வேண்டும்.

அனஸின் செயலால் அவனிடம் இனி எந்த நட்பும் கொள்வதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டேன். தொடர்பே இல்லாத காரணம் காட்டி விவாகரத்துப் பெற்றாள். நான்கு மாதங்கள் நகர்ந்தோடின.

ருமைஸாவை முறைமாமன் மகனுக்கு திருமணம் செய்துவைக்க ஏற்பாடு நடந்தது. அனஸால் இழந்த மானத்தைப் போக்க வேறுவழியின்றி ருமைஸாவும் சம்மதித்தாள். திருமணம் பக்கத்து வீட்டாருக்கும் தெரியாத முறையில் நிகழ்ந்தது.

அனஸ் பம்பாயில் இறக்கப்பட்டான். போலி முகவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவனை ஏமாற்றிவிட்டார். இலங்கை தூதுவராலயம் மூலமாக இன்னும் சில தினங்களில் இலங்கை வரவிருக்கின்றார். பணத்தை மட்டுமல்ல, மனைவியையும் இழந்து விட்டான்.

நண்பனிடம் பெற்ற பணத்தை எப்படி திருப்பிச் செலுத்துவது என்பதை நினைக்க அவனுக்கு பைத்தியம் பிடிக்கும்போல் இருந்தது. பைத்தியம் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ‘‘ஏமாற்றியோர் ஏமாற்றப்படுவர்’’ என நான் நினைத்துக் கொண்டேன்.

நவமணி

01.07.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைமாறி பயணங்கள்

எவ்வளவு நேரம் கனவுலகில் சஞ்சரித்து கற்பனையில் உளம்பூரித்து என்னை மறந்திருப்பேனோ எனக்கே தெரியாது.

''சிபானா'' என்றழைக்கும் ஒலி கேட்டு திரும்பினேன். தோழி சாஹிரா சிரித்தபடி நின்றாள்.

'மிச்சநேரமாடி வந்தே...! நான் சிந்திச்சா நீ புதினம் பார்க்கணுமா'' என்றேன்.

''சிபானா... உனக்கு எவ்வளவு கவலையிருந்தாலும் கற்பனை பண்ணி மகிழ்கிறாயே. துணிவுள்ளவள்டீ'' என்றாள் தோழி சாஹிரா. கவலைப்பட்டு என்ன செய்ய முடியும்? என்ன நடக்கும்? அன்பாக இருந்த கணவன்தானே இன்னொரு பெண்ணை கண்டு அவள் பின்னால் போய்விட்டாரே!

''என்னடி மீண்டும் சிந்திக்கிற? உன்ர புருஷனப்பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சதா?'' என்று சாஹிரா கேட்டாள்.

''இன்னொருத்தியோட சேர்ந்து வாழ்ரவர இனி எண்ணிப்பார்த்து என்ன பயன்? என் புருஷனப் பத்தி எனக்குத் தெரியும்டீ. இன்னொருத்தியோட இருந்து வாழ்ந்தாலும் ஒரு வருஷம் போனாப்பிறகு என்னோட வாழ வருவாரு. கொஞ்சக்காலம் போனா எந்தப் பெண்ணும் அவருக்கு அலுத்துப் போயிடும். நான் எல்லாத்தையும் அனுபவத்தில கண்டவள்'' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புருஷனப் பத்தி அனுபவத்தில என்னத்தக் கண்டாய்?'' சாஹிரா வினாவெழுப்பினாள்.

''என் புருஷன் திருமணம் முடிச்சி ஒரு வருஷம் எந்தக் குறையும் இன்றி வெச்சிருந்தாரு. ஒரு நாள் இரவு சும்மா படுத்தா அடுத்தநாள் இரவு உடலுறவு கொள்ளாம படுக்க மாட்டார். அப்படிப்பட்ட ஆச உள்ளவரு...'' என்று இழுத்தேன் நான்.

''அப்ப வேற எவளையும் வெச்சுக்கொண்டார் போல'' ஆச்சரியத் குறியில் கூறினாள் தோழி சாஹிரா.

''ஆமாம்டி. அத கடசியிலே சொல்றன். ஒரு வருஷத்துக்குப் பொறகு கால் வலிக்கிது, தலவலிக்கிது என்று பேசாமப் படுத்திருவாரு. அதற்குப் பொறகுதான் அவருமேல சந்தேகம் வந்திச்சு. எங்க போறார்? யாரோட பேசிறார் என்பத ஆராயத் தொடங்கினேன்'' என்று நிறுத்தினேன்.

''ஆ.. நீ லேசுப்பட்ட ஆளா? படிக்கக்கோள கூட இரண்டு பேர லவ்பண்ணி இரண்டு பேருக்கிட்டையும் நிறைய சொக்ளட் வாங்கிச் சாப்பிட்டவளல்லவா?'' என்றாள் சாஹிரா.

''அதெல்லாம் விளையாட்டுக் காலம். வெறும் காதல்தானே. நான் சமையல்ல ஈடுபட்ர நேரம், பாத்ரூமில் நிக்கிற நேரம் என்ர தங்கச்சியோட பேசிப்பேசி இருப்பார். சிரிப்பார். அதுல எனக்கு டவுட் வந்திச்சி. தங்கச்சும் அவரோட பேசிச் சிரிப்பதில விருப்பமுள்ளவளாயிருந்தாள். பாத்ரூமுக்குப் போய் குளிப்பதாகச் சொல்லிட்டு பாத்ரூமுக்குள்ள இருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவும் எங்கேயோ போயிருந்தா.

புருஷனும் தங்கச்சும் சிரிப்பும் பேச்சுமாகயிருந்தாங்க. பாத்ரூமில குளிக்கிறதாகத்தான் நினைச்சிருப்பாங்க. தங்கச்சும் புருஷனும் பேசுவது குறைந்து குசுகுசுப்பது கேட்டது. இரண்டு நிமிடங்களின் பின்னர் எதுவித சத்தமும் கேட்கவில்லை. பாத்ரூமை சத்தமில்லாமல் திறந்து போனேன். வெளிஹோலில் புருஷனைக் காணவில்லை. தங்கையையும் காணவில்லை. பெட்ரூம் பக்கம் சத்தம் கேட்டது. சத்தம் ஏற்படாமல் மெதுவாக பெட்ரூம் கதவைத் திறந்தேன். அவர்களுக்கு இது தெரியாது. என் புருஷன் மூலமாக தங்கச்சி இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தாள். என் புருஷன் என்னோட நடப்பதைவிட பல மடங்கு மேலாக நடந்தார். உச்சக் கட்டம் அவர்களுக்கு. நான் பார்த்துக் கொண்டிருப்பதுகூட தெரியவில்லை.

ஆத்திரம்தான் வந்தது. கதவுத் தடியெடுத்து புருஷனுக்கு ஒரு போடுபோட்டேன். வெடுக்கென எழும்பி வெட்கத்திலே நின்றார். உடனே வெளிஹோலுக்குப் போனார். தங்கச்சியின் தலைமுடியை இழுத்து மார்பிலே குத்தினேன். தங்கச்சி என்னைப் பார்க்கவே வெட்கப்பட்டாள். எனக்கு மேலும் ஆத்திரம் கூடியது.

''என்ன வேலையைப் பார்த்தாய்டி. உனக்கு வெட்கமில்லையா? நீயுமொரு பொம்புளையா?'' என்று கேட்டுவிட்டு அவளது உள்ளுறுப்பில் உதைத்தேன். ஒருதரமல்ல பலமுறை அவள் சத்தமிட்டு அழுதாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனிடம் வந்தேன். ''கைகால் வருத்தம் என்பீங்க. வருத்தம் வாற வழியக் கண்டுட்டேன்.'' என்று கூறி அவமானப் படுத்தினேன். அதன் பிறகு தங்கச்சி புருஷனோட பேசுவதை தடுத்திட்டம்'' என்றேன்.

''உன்ர தங்கச்சிக்கென்ன வெட்கம் ரோசமில்லையா?'' சாஹிரா கேட்டாள். கல்யாணம் முடிச்சு வருஷக் கணக்கில என்னோட இருந்தவனுக்கே இன்னும் அடங்கல்லென்னா காணாதவள் விடுவாளா?'' என்றேன்.

''உன்ர தங்கச்சி நாள் கணக்கிலே இப்படி செய்திருப்பாள். வயித்தில பூச்சி புழு உருவாகுமே'' என்றாள் சாஹிரா.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ''கள்ளனுக்கு கள்ளப்புத்தி இருக்கும்தானே! புருஷனே கருத்தடை மாத்திரை வாங்கிக் கொடுத்திருக்கிறார். தலைவலி மாத்திரையென்று உம்மாவிடம் சொல்லி தங்கை விழுங்கியிருக்கிறாள்'' என்றேன் நான்.

''அது சரி சிபானா. இப்படி இன்பத்தைக் கண்டவள் சும்மா இருக்கமாட்டாளே! எப்படியாவது யாரையாவது வெச்சிருந்தா...'' என்று இழுத்து நின்றாள் சாஹிரா.

''வீட்டைவிட்டு வெளியிறங்க விடுவதில்லை. உம்மாவும் தங்கச்சிக் கூடவே இருப்பா. நாங்க மாப்பிள்ளையும் பேசியிருக்கம். விரைவிலே தங்கச்சிக்கி திருமணம் நடக்கும்'' என்றேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன்னைவிட்டுப் போனவர நினைச்சுக் காலத்தைக் கடத்தாம நீயும் இரண்டாம் தரம் கல்யாணம் முடிச்சி வாழப் பாரு சிபானா. போன காலம் திரும்பிவராது. உன்ர புருஷன் இன்பத்தை அனுபவிச்சிட்டு வயசு போன காலம் வந்தா என்னத்துக்கு?'' என்று அறிவு பகர்ந்தாள் சாஹிரா.

''நீ சொல்றதும் சரிதான். அடுத்த வருஷம் என்னத் தேடி வரனும். இல்லாட்டி வேறு ஒருத்தியோட போவார்'' என்றேன் நான்.

''அப்படியான காமுகனை நம்பி ஏன் நீ இரிக்கனும்? அப்படிப்பட்டவன் திரும்பவும் வேறு யாரோடும் ஓடிருவான்'' என்றாள் தோழி சாஹிரா.

அவள் சொல்வதிலும் உண்மை இருப்பதாகபட்டது எனக்கு. அவர் மீண்டும் வந்தால் கட்டுப்பாடுபோட்டு கண்காணிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். ஆண் பிள்ளைதானே! ஓடி விட்டால் என்ன செய்ய முடியும்?

''சாஹிரா... நீ சொல்ற சரிதான்! இன்னொருவனை கல்யாணம் முடிச்சி என்னால வாழமுடியா! அப்படி வாழ நெனச்சாலும் எந்த் ஆம்புள்ளை திருமணம் செய்த என்னை மணம்முடிக்க முன்வாறான்? எத்தனை கல்யாணம் முடிச்ச ஆண்களையும் முடிக்கிறாங்க. பெண்ணை எவனும் முடிக்கவாறான் இல்லியே! அதுதான் அவர் வந்தா வாழத்தயார் என்று சொன்னன்'' என்றேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி சாஹிரா மௌனம் சாதித்தாள். பின்னர் ''கல்யாணம் முடிச்சவளை முடிக்க யாரும் முன்வருது குறைவுதான். பெண்கள் பெறுமதி இல்லாதவளா போனம்'' என்றாள்.

இனி எப்படியாவது தோழி சாஹிராவை அவளின் வீட்டுக்குப் போகச் செய்ய வேண்டும். ''போ'' என்று சொல்லாமல் போகவைக்க வேண்டும். இன்னும் சில நிமிடங்ளில் அமீன் வந்து விடுவான். அவனோடு இன்பமாக கதைத்து சிரித்துக் கொண்டிருக்க வேண்டுமே!

''சாஹிரா... உன்புருஷன் வாற நேரமாகுது. உனக்கு ஏசுவாரு'' என்றேன் நான்.

''ஆமாம்டி. நான் வாறன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் சாஹிரா.

ஐந்து நிமிடங்களில் அமீன் வந்து சேர்ந்தான். அவன் என் கணவனின் நண்பன்தான் அதனால்தான் கணவனின் கள்ளத்தனங்கள் பலவற்றை சொல்லித்தந்திருக்கிறான். என் தங்கையோடு தொடர்பு வைத்ததையும் அவனிடம்தான் சொல்லி இருக்கிறார். அதனால்தான் கையும் மெய்யுமாக என்னால் பிடிக்க முடிந்தது.

''சிபானா... கடும் யோசனையிா இருக்கீங்க. அப்ப நான் போகட்டா?'' அமீன் கேட்டான்.

''ஆ... நல்லா இரிக்கும். உங்கட்டே பேசி மகிழத்தானே நான் காத்திரிக்கன். நீங்க ஒருத்தரும் இல்லாட்டி எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்? என் கணவன்தான் இன்னொருத்தியோட வாழ்றார். நான் உங்களோட வாழாட்டியும் உங்களோட பேசி மகிழ்கிறேன்தானே! உங்க மனைவியும் மிச்சம் நல்லவள். எப்படித்தான் நாம பேசிக்கிட்டு இருந்தாலும் சந்தேகப்படமாட்டாரே! அதனால இருங்க. ஆறுதலா பேசுவம்'' என்றேன் நான்.

''உம்மா எங்கே?'' அமீன் கேட்டான்.

''புதுவீடு குடி போயிற்றாங்க. தங்கச்சிக்கு திருமணம் நடக்கப் போகுது'' என்றேன்.

''அப்ப நாம சுதந்திரமா இருந்து பேசலாம் என்டு சொல்றீங்க'' என்று கூறிய அமீன் எனக்கு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

''இரண்டு நாட்களுக்கு முன்னர் சிபானாவின் கன்னத்தை கிள்ளினேன். பொய்க்கு சிணுங்கினாள். தடுக்கவில்லை. நேற்று கன்னத்தில் முத்தமிட்டேன். சும்மா இருங்க என்றுதான் சொன்னாள். கன்னத்தை தந்தவண்ணம். இன்டைக்கு கட்டிப்பிடித்து முத்தமிட வேண்டும். அடுத்த நாள் எல்லாம் செய்யலாம்'' என்று நினைத்துக் கொண்டான் அமீன்.

''என்ன அமீன் யோசனை?''

''ஒன்றுமில்லே. உன்னழகை பார்த்துப் போட்டு உன் கணவன் ஓடி இருக்கானே...! தக்காளிப்பழ கன்னம். என்னையும் அல்லவா மயக்குது. என் பொண்டாட்டியவிட எவ்வளவு அழகா இருக்கிங்க.'' என்று கூறி கன்னத்தை தடவினான் அமீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாக இருக்கின்ற எனக்கு அவ்விதம் செய்வது விருப்பமாகத்தான் இருந்தது. என் கணவன் அல்லவா நான் இருக்கும்போது என்தங்கச்சியோட சுகம் அனுபவித்தவர். வேறு வேறு பெண்களையும் நாடியவர். நான் எவரின் துணையும் இல்லாதவள். இப்பதான் அமீனோடு அதை இதை கதைத்து சிரிக்கிறேன். அமீன் இப்பதான் கன்னத்திலே காலிலே கையை போடுகிறார்.

''சிபானா... நான் இருக்கும்போது சிந்திக்கக்கூடா." என்றார் அமீன். பின்னர் இருவரும் இனிமையான கதைகள் பல பேசினோம். தாயார் இல்லாதது பெரும் உதவியாகிவிட்டது.

அவர்போகும்போது செய்தாரே வேலை நினைக்க வெட்கமாகவும் இன்பமாகவும் இருக்கின்றது.

என்னை கட்டிப்பிடித்தார். விடுவிப்பதை மறந்து நானும் சேர்ந்து அவரை அணைத்தேன். அவரின் கரம் என் உடலெங்கும் புகுந்து விளையாட்டியது.

''மிகுதியை நளைக்கு வைத்துக் கொள்வோம் என்றவாறு விலகினார். நாளைக்கு நடக்கப் போகின்ற இன்ப விளையாட்டை நினைக்க சந்தோஷமாகத்தான் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத நெஞ்சங்கள்

உமா சாந்தன் திருமணம் எதிர்பாராத ஒரு விபத்து. ஆறி அமர்ந்து தீர்மானித்து முடிக்கவேண்டியது திருமணம். இதில் உமா மட்டுமல்ல சாந்தனும்தான் அவசரப்பட்டு கொண்டான். இவர்களின் திருமணம் நடந்து வருடம் ஒன்றாகிவிட்டது.

உமா ஏழைப்பெண் ''எத்தனையோ பேசிவந்த திருமணங்களை கெடுத்துவிட்டார்கள்'' என்ற நோக்கில் அவசரப்பட்டுக் கொண்டாள்.

சகல விடயங்களிலும் இருவரும் இரு துருவங்களாகும். ஒருவருக்குப் பிடிப்பது மற்றவர் வெறுப்பதாக இருக்கும். விட்டுக் கொடுப்பே இல்லை. அன்று மாலைவேளை அலுவலகம் இருந்து வீட்டுக்கு வந்தான் சாந்தன். கணவன் வீட்டுக்கு வந்ததை அலட்சியம் செய்துவிட்டு உமா அவள் பாட்டில் இருந்தாள். சாந்தன் எதுவும் பேசவில்லை. என்ன பேசினாலும் சத்தம்போட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடுவாள் உமா. மானம் காற்றில் போய்விடும் என்று பேசாமல் இருந்தான் சாந்தன்.

உடைகளை மாற்றிவிட்டு பாத்ரூமுக்குள் புகுந்தான். ஆறுதலாக மேனியை கழுவிக்கொண்டு வந்தான். தேனீர் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் தையல் மெசினில் ஏதோ தைத்துக் கெண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு 'டீ கொண்டாங்க" என்றான் சாந்தன். கேட்டும் கேளாதவள்போல் காட்டிக்கொண்டாள். இதற்கு மேல் ஏதாவது பேசினால் தெருவில் போகின்றவர் களுக்கு கேட்கத்தான் ஏசுவாள் உமா. மூன்று நிமிடங்கள் தாமதித்து சமையலறைப்பக்கம் போனாள்.

''அவசரப்பட்டு திருமணம் செய்தேனே! பாவம் ஏழையென்று வாழ்வு கொடுத்தேனே! அதற்கு கைமாறு செய்கிறாள் உமா. நன்றி மறந்தவளை திருமணம் செய்தேனே! திருமணத்துக்கு முன்னர் பணிவின் உருவாக நடந்தாளே. ஒரு பேச்சும் பேசாது வாய்மூடி இருந்தாளே! அடக்கமானவள் என்று கைப்பிடித் தேனே! இப்போது வட்டியும் முதலுமாக வாய்காட்டுகிறாள். எதற்கும் எதிர்ப்பேச்சு தயங்காது பேசுகின்றாள். எதிர்ப்பேச்சு பேசினாலும் பரவாயில்லை. கணவன் - மனைவி பிரச்சினையை தெருவால் போவோரும் கேட்டுப் போகும்வண்ணம் சத்தமிட்டு ஏசுகின்றாள். கணவனுக்கு பேசுவதுபோலா பேசுகின்றாள்? தெருவால் போகும் ஒருத்தனுக்கு ஏசுவது போலல்லவா பேசுகின் றாள். தெருவுக்கு சென்று வரவும் கூச்சமாக இருக்கின்றது" என்று சிந்தனை செய்தபோது தேனீர் கோப்பையை டீப்போவில் வைத்தாள் உமா.

தேனீரை குடித்தான் சாந்தன். எத்தனை முறை உமாவுக்கு சொல்லி இருக்கிறான் ''சீனிவருத்தக்காரன். சீனியை குறைத்துப் போடு என்று" அவள் கேட்டால்தானே! அள்ளிப்போடுவாள். சொல்லி அலுத்துப் போய்விட்டான். தீடீர் திடீரென தேனீர்கடைக்குப் போய் குடிக்கவா முடியும்? அடிக்கடிபோய் கடையில் குடித்தால் அலுவலக கௌரவம் என்னாவது? வருவது வரட்டும் என்று தேனீரை குடிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘எத்தனை தரம் உங்களுக்கு சொல்லி இருக்கின்றேன். சீனியை கொஞ்சம் குறைத்து போடமுடியாதா? நான் டயபிட்டிஸ் காரன் தெரியும்தானே’’ என்று ஒரு முறை கேட்டான் சாந்தன்.

‘‘எப்படி குறைச்சாலும் கூட, கூட என்று சொன்னா நான் என்ன செய்யிற? அப்ப.... இனி கடையிலே போய் குடிங்க’’ என்று ஒரேயடியாக சொல்லிவிட்டாள் உமா. இப்படி சொல்வாள் என்று எதிர்பாராத சாந்தனுக்கு சிறிதுநேரம் அதிர்ச்சியாகி விட்டது.

‘‘ஒரே தேனாகத்தான் இருக்கு. இரண்டு கரண்டியிலே ஒன்றைக் குற’’ என்றான் மீண்டும் சாந்தன்.

‘‘நான் போட்டுத் தாறதை குடிங்க. இல்லாட்டி விடுங்க’’ என்றாள் உமா! அப்போது முன்வீட்டு ராணி வந்துவிட்டாள். சாந்தனுக்கும் மனைவிக்கும் ஏதாவது வாக்குவாதம் ஏற்படுகின்ற வேளை ஓடிவந்து விடுவாள் ராணி. பிரச்சினையை கண்குளிர பார்த்து ரசிப்பதில் அவளுக்கொரு திருப்தி. உமாவோ ராணியை கண்டவுடன் கணவன் என்றும் பாராமல் சாந்தனுக்கு தாறுமாறாக ஏசுவாள். உமா வாழத்தெரியாதவள் என்பதை ராணியே உணர்ந்து கொள்வாள். இருந்தும் வாய்மூடி வேடிக்கை பார்ப்பாள்.

இவற்றுக்காகவேதான் சாந்தன் அதிகம் பேசாது மௌனமாக இருந்து வேதனையுறுவான்.

இன்றும் தேனாக இனிக்கும் தேனீரை எதுவும் பேசாமல் அருந்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலருக்கு சில தாழ்வுச்சிக்கல்கள். ராணி பெரிதாக கற்பனை பண்ணி இருந்தாள். காதலித்த கச்சேரியில் வேலை பார்க்கும் மதனை திருமணம் செய்யலாம் என்று நம்பினாள். பணவசதி யற்றவர்கள் அவ்வாறெல்லாம் நம்பக்கூடாது. என்பதை இப்போது உணர்ந்திருக்கிறாள். ஏழையானபடியால் கூலி வேலை பார்க்கும் தொழிலாளி முத்துச்சாமியைத்தான் திருமணம் செய்ய முடிந்தது. இருந்தாலும் பெரிதாக கற்பனை பண்ணுவாள். உமா அரசாங்க உத்தியோகத்தனை திருமணம் செய்தபடியால் ராணியின் கொடியமனம் உமா - சாந்தன் பிரச்சினையை பெரிதாக்கி தீயை மூட்டி குளிர்காயவே நினைத்தது.

இந்த உண்மையை தெரியாது படுமுட்டாளாக இருப்பாள் உமா.

உமாவின் அறியாக்கோலம் ராணிக்கு பெரும் உதவியாகி விட்டமையால் எண்ணத்தை மெதுவாக செயலாக்கினாள். சாந்தன் இல்லாதநேரம் உமாவின் வீட்டுக்கு சென்றாள் ராணி. இருவருக்குள்ளும் வெறுப்பு, பிரிவு வரவேண்டும் என்பதே அவள் நோக்கம். இல்லாவிட்டால் உமா ராணியைவிட சிறப்பாக இருப்பாள் அல்லவா....!

‘‘வேலைக்கு பெய்த்தாரா?’’ கேட்டுக் கொண்டே வந்தாள் ராணி.

‘‘ஆமா பெயித்தார்...’’ என்று இழுத்தாள் உமா.

‘‘என்ன உமா முகம் கவலையில வாடியிருக்கு?’’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘எந்த நாளும் அவரால் தொல்லையாத்தான் இருக்கு’’

‘‘அதுதான் உமா சொல்ற. நானும் படிச்சவதான். ஒருதொழிலாளியை கல்யாணம் முடிச்சா நம்ம பாட்டுக்கு சந்தோசமா வாழலாம். நாம எதுசொன்னாலும் கேட்டுக்கு இருப்பார். அப்படித்தான் என்ர வாழ்கதை போகுது. கூழகுடிச்சாலும் குஷியா இருக்கணுமே’’ என்றாள் ராணி.

‘‘ராணி நீ சொல்ற சரிதான். பொருள், பண்டத்துல எந்த குறையும் இல்ல. அதை செய் இதைசெய் என்பார். உன்னைப் போல அங்க இங்க திரியிறதையும் விரும்புகிறார் இல்லை’’ என்றாள் உமா.

‘‘உமாவின் கெட்டமனதுக்கு புனிதமான சாந்தன் அவளை திருமணம் செய்திருக்கிறாரே. என்னை அவர் திருமணம் செய்திருந்தால் பெயரைப்போல் ராணியாகவே வாழ்ந்திருப்பேன். குரங்கின் கையில் பூமாலை போல் உமாவின் கையில் சாந்தன். வாழத்தெரியாத உமா சாந்தனை பிரிந்து வருந்தட்டுமே’’ என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு வேறுவிதமாக பேசத்தொடங்கினாள் ராணி.

‘‘தொல்லை என்றால் உனக்கு எதற்கு இந்த வாழ்க்கையும் கணவனும்! நிம்மதிதானே வேணும்’’ தனது குள்ளத்தனத்தை வெளிக்காட்டி பேசினாள் ராணி. நன்றாக வாழ்வது பிடிக்காமல் வாழ்வை பிரிக்க பேசுகிறார்கள் என்ற உள்நோக்கம் புரியாத பேதை பெண்ணாக இருந்தாள் உமா. திருமணத்திற்கு முன்னர் ஒரு உமாவாகவும் திருமணத்திற்கு பின்னர் வேறு ஒரு உமாவாகவும் மாறிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘இனி அவர் ஏதாவது சொன்னால் வீட்டைவிட்டு போகச் சொல்லிடுவேன். இனி பிரிவுதான்’’ என்றாள் உமா. இக்கூற்று ராணியின் நெஞ்சில் தேன் கொட்டினாற் போலாகியது. உமாவுடன் அன்பாக பேசினாலும் அவளின் வாழ்வை பிரிப்பதில் முக்கிய பாத்திரம் வகிக்கின்றாள் ராணி. நெஞ்சமெங்கும் பொறாமைத் தீ...!

ராணி அவளின் வீட்டிற்கு சென்று சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

உமா தாமதமாகக்தான் சமையல் வேலையில் ஈடுபடுவாள். அவ்வாறு தாமதித்து கணவனுக்கு உணவளிப்பதிலும் அவளுக்கொரு இன்பம். முன்வீட்டில் தொழிலாளிக் கணவனான முத்துச்சாமிக்கு உணவளித்துவிட்டு தானும் சாப்பிட்டாள் ராணி.

அலுவலகம் இருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான்! நேரம் இரண்டுமணி. மதிய உணவு இன்னும் தயாராகவில்லை.

‘‘இன்னும் சமையல் முடிக்கவில்லையா?’’ அவ்வளவுதான் கேட்டான் சாந்தன்.

‘‘கொஞ்சம் பொறுக்க முடியாட்டி எங்கெண்டாலும் போய்த் தொலைக்க வேண்டியதுதானே. போங்க’’ என்றாள் உமா.

‘‘இரண்டரை மணிக்கு அலுவலகத்திற்கு திரும்ப போகணும். உனக்கு தெரியும்தானே? அன்டைக்கு அன்டை சாமான் வாங்கி சமைக்கிறவங்களே சமைச்சு தின்டும் முடிஞ்சு, பசியால் வந்த என்னை நீ எங்க போகச் சொல்றாய்? அடிக்கடி போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ... என்றாயே! எங்க போகச் சொல்றாய்?'' கேட்டான் வசந்தன்.

''என் வீட்டில் இருக்காம எங்கெண்டானே போ'' என்றாள் உமா. மேற்கொண்டு எதுவும்பேச சாந்தனால் முடியவில்லை. வெட்கமும் துக்கமும் நெஞ்சை இறுகவைத்தது.

செல்போனில் அலுவலகத்திற்கு தொடர்புகொண்டு அரைநாள் லீவு போட்டான். உடைகளை மட்டும் எடுத்துக் கொண்டு தாய் வீட்டிற்கு வந்துவிட்டான். ''போ'' என்று சொன்னவளின் வீட்டுக்கு இனி போவதேயில்லை என்ற தீர்க்கமான முடிவுடன் இருக்கின்றான்.

நாட்கள் செல்ல செல்ல. கஷ்டங்கள் என்னவென்பதை உமா அறியத்தான் போகிறாள்! சாந்தனின் அருமை பெருமைகளை உணரத்தான் போகிறாள். அதற்கு நாட்கள், மாதங்கள் நகர வேண்டும். அவ்வாறு நாட்கள் நகர்வின் பின் உமா சாந்தனை அழைத்துவரச் செல்லும்வேளை இனி இந்த தொல்லை வேண்டாம் என்று சாந்தன் நிரந்தரமாகவே பிரிய முடிவெடுத்தால் உமாவால் எதுவுமே செய்ய முடியாது. எதுவும் நடக்கலாம்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன வெறிகளுக்கு அப்பால் ....!

சிவா என்னை உள்ளறையில் உட்கார்ந்திருக்குமாறு சொல்லிவிட்டு வெளியே காவலுக்கு நின்றான்.

''நஜிமுடீன் தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம் உச்சிக்குப் போய்விட்டது. இருபக்கமும் பலர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இந்தக் கட்டத்தில் நீ ஊருக்கு எப்படிப் போகமுடியும்? எதிர்ப்பக்கத் தெருவிலே பொல், வாள், கத்தியுடன் இளைஞர்கள் கூட்டம் நிற்கிறது. இங்கேயே உன்னை சமாதி கட்டிவிடுவார்கள். ஒருவாரமாவது கழிந்த பின்னர்தான் குழப்பம் தணியும்போல இருக்கு. இங்கிருந்து தமிழர்கள் முஸ்லிம் ஊர்களுக்கு போய்வருகின்றார்கள் என்ற தகவல் கிடைத்த பின்னர்தான் உன்னை போகவிடுவேன். அதுவரை என்வீட்டிலேயே உனக்கு சிறை. சாப்பிட்டு சாப்பிட்டு இரு. தேவை என்றால் புத்தகங்கள் இருக்கு படி'' என்றான் சிவா.

''சிவா உனக்கு ஏன் வீண்சிரமம்? இரவைக்கு நான் போறன்'' என்றேன் நான்.

''நஜிமுடீன் நீ சின்னப்புள்ள மாதிரிப் பேசாத. இனக்கலவரம் என்று ஒன்றுவந்தா சில இளைஞர்கள் படுக்கிறார்களா? இரவில் தானே இனமோதல் அதிகம். நாமதான் இதற்கப்பால் ஒற்றுமையாக பழகுகிறோம். பெருநாளைக்கு உன்ர வீட்ட வந்து சாப்பிடாட்டி எனக்கு பத்தியமில்ல. வருஷத்துக்கு என்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
137170

வீட்ட வந்து பலகாரம் சாப்பிடாட்டி உனக்கு தூக்கம்வராது. முன்னுக்கு இளம்பொடியன்மார் சத்தம் கேட்கிது. முன்னுக்குப் போறன். புதுமைப் பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' சிறுகதைத் தொகுதி மேசையில் கிடக்கு. எடுத்துப்படி" என்று கூறிவிட்டு முன்னுக்குப் போய்விட்டான் சிவா.

இனவெறியர்கள் நிறைந்த காலகட்டமிது. ஒரு இனம் இன்னொரு இனத்தை அழித்தொழிக்கப் பார்க்கிறது. இந்தக் காலத்திலே சிவாவைப் போன்ற வெறித்தனமற்ற தூயவர்கள் அங்கொருவர் இங்கொருவராக இருக்கின்றார்கள். சிவா எனக்கு நண்பனாக கிடைத்தமை நான் செய்த புண்ணியம்தான்! நான் இங்கிருப்பதாக யாரும் தெரிந்து கொண்டார்களென்றால் சிவாவையும் சேர்த்து உதைத்துவிடுவார்கள். எனக்கும் பயமாகத்தான் இருக்கின்றது. எப்படி என்னால் உறங்க முடியும்? எப்படி என்னால் சாப்பிட முடியும்? பசிதான் வருமா? இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும்போது முன்புறம் சென்றிருந்த சிவா கதவை இழுத்து மூடிவிட்டு உள்ளே வந்தான்.

எனது உடம்பு பயத்தால் வியர்த்தது. முகம் விகாரமாகியது. சிந்தனையே என்னை சீராக பற்றிப் பிடித்தது.

"நஜிமுடீன் உனக்கு கவலை தேவல்ல. பயப்படாதே. நீ இங்கு வந்தத யாரும் காணல்ல. பேசவேண்டியத மெதுவா காதோட பேசு. யாரும் உறவினர்கள் வந்தா கதவத் திறப்பன். மூலையிலே இருக்கிற கட்டிலுக்குக் கீழே போய்ப்படு. இருட்டு தெரியாது. சாந்தகுமாரி பல்பை கழற்றிப்போட்டு சுட்ட பல்பை போடு" என்று மனைவியிடம் சொன்னான் சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாவின் நல்ல குணத்திற்கு என்ன கைமாறு செய்வேன் என புரியாது தவித்தேன்.

''நஜிமுடீன் பார்த்தையா? மீண்டும் யோசிக்கத் தொடங்கிட்டாய். இந்தா மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை' படித்துப்பார். மனதுக்கு தெம்புவரும்'' என்றான் சிவா.

நான் கவலைப்படுவதை பார்த்து சிவா கவலைப்படும் அளவிற்கு எங்கள் நட்பு வளர்ந்துவிட்டது. நானொரு முஸ்லிம். அவனொரு தமிழன். ஆனால் அவனில்லாமல் நானில்லை. நானில்லாமல் அவனில்லை. அலுவலகத்திற்கு சிவா லீவு என்றால் நானும் லீவு எடுத்திருக்கலாமே என்று நினைப்பேன். அன்றைய பொழுது போவதே பெரிய காரியம். மதிய போசனம் எடுக்கும்வேளை சாப்பிடவே முடியாமல் போகும். ஒருநாள் மகனுக்கு சுகமில்லை என்று வைத்தியசாலைக்கு அழைத்துப் போனேன். தாமதமானதால் வேலைக்குப் போக முடியவில்லை. அன்று சிவா அரைநாள் லீவு போட்டுவிட்டு வீடு சென்றுவிட்டான்.

நானும் சிவாவும் ஒன்றாக உணவெடுப்பது, தேனீர் குடிப்பது, எதற்கும் ஒன்றாகச் செல்வது, பக்கத்திலே அமர்ந்து கொள்வது இதனைப் பார்த்து ஏனைய நண்பர்கள் கிண்டல் செய்வார்கள். ''அவர்கள் கணவனும் மனைவியும்'' என்று சொல்வார்கள். எங்கள் நட்பு தடையின்றி மென்மேலும் இறுக்கமடைந்நது.

''நஜிமுடீன் இருந்த இருப்பிலே இருக்காம பாத்ரூம் போறென்டா போய்வா. யார் வந்தாலும் கதவு திறக்கமாட்டம்'' என்றான் சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறிய உடனேயே எனக்கு சிறுநீர் கழிக்க வேண்டும் போலிருந்தது. போய் முகத்தையும் கழுவிக் கொண்டு வந்தேன். சிவாவின் மனைவி சாந்தக்குமாரி முணுமுணுப்பது கேட்டது.

''என்னடி என்ன பிழை சொல்ற'' சிவா மனைவியைக் கோபமாகப் பார்த்தான்.

''வெள்ளிக்கிழமை நீங்க வேலைக்குப் போகாம கட்பண்ணினீங்க அதான் பிழையென்கிறன். சனி ஞாயிறு லீவு. உங்கள திங்கட் கிழமைதான் அலுவலகத்திலே பார்க்க முடியும் என்பதால ஞாயிற்றுக்கிழமை நஜிமுடீன் வந்திருக்கிறார். உங்களோட கொண்ட பாசத்தால. நான் வேலைக்குப் போகச் சொன்னேன் கேட்டால்தானே. கால் வலிக்கிது என்று சுருண்டு படுத்தீங்க. இப்ப பாவம் நஜிமுடீன் மாட்டிக்கிட்டார்'' என்றாள் சிவாவின் மனைவி சாந்தகுமாரி.

''இப்படி இனக்கலவரம் வருமென்று யாருக்கடி தெரியும்'' என்று முறைத்தான் சிவா.

''எனக்காக நீங்க சண்டை பிடிக்காதீங்க'' என்றவாறு உள்ளறையில் போய் அமர்ந்தேன்.

''நஜிமுடீன்... நானும் மனைவியும் அடிக்கடி கீச் பூச்சென்போம். அடுத்த நிமிஷம் சந்தோசமா சிரிச்சிப் பேசுவம். டோன்வொறி'' என்றான் சிவா. என்னைப் பொறுத்தவரை சிவா தங்கப்பழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டான பின் பின்புறம் வந்து பார்த்தேன். வானம் புகை மண்டலமாய் தெரிந்தது. ஆட்கள் ஓடுகின்ற சத்தமும் கூக்குரலும் தொடர்ந்தன. துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஒலிபெருக்கி ஏதோ அறிவிப்புச் செய்வது கேட்டது. உடனே கதவை இழுத்து மூடிவிட்டு உள்ளறைக்கு வந்துவிட்டேன்.

''நஜிமுடீன் நீ வெளியே போகாதே. உள்ளேயிரு. தேவையானதை கொண்டுவந்து தருகிறேன்'' என்று சிவா கூறும்போது வெளியே யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டது. எனக்கு நாடித் துடிப்பே நின்றுவிடும்போல் இருந்தது.

சிவா மனைவியிடம் ''உறவினராக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் சரி நஜிமுடீன் இருப்பதை கூறிவிடாதே. யாரையும் நம்ப முடியாது'' என்று மெதுவாக சொல்லிவிட்டு கதவைத் திறந்தான். நான் அல்லாஹ்வைப் பிரார்த்தித்துக்கொண்டே இருந்தேன்.

''வா மச்சான் வா. என்ன இந்தப் பக்கம்'' என்று சிவா கூறிவிட்டு முன்விறாந்தையில் அவரை அமரச் செய்து உரையாடுவது எனக்குத் தெளிவாகக் கேட்டது.

''எனக்கு என்ன நேரப் போகின்றதோ. அல்லாஹ் என்னைக் காப்பாற்ற வேண்டும். என் அன்பு மக்கள் மனைவி இவர்களுக்காக என்னைக் காப்பாற்று. நானில்லாவிட்டால் அவர்களின் நிலமை என்னவாகும்? தமிழ் - முஸ்லிம் இனக் கலவரத்தை இன்னேரம் என் மனைவி அறிந்து என்ன வேதனைப்படுவாள்! யா அல்லாஹ் ஒரு பாவமும் அறியாத என் பிள்ளைகளுக்காக என்னைக் காப்பாற்று'' என்று இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனைப் பிரார்த்தித்து பயந்தவாறு இருந்தேன்.

இதனைக் கண்ணுற்ற அன்பு நண்பன் சிவாவின் அருமை மனைவி சாந்தகுமாரி என்னருகே வந்து மெதுவாக ''பயப்படாதீங்க அவர் உள்ளவரமாட்டார். ஊரடங்குச் சட்டம். அவருக்கு தண்ணியடிக்க இடமில்ல. கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் போயிடுவார். இந்த லைட்ட ஓப் பன்றன். அவங்க என்ன பேசிறாங்க என்று இவடத்த வந்து கேளுங்க'' என்று கூறி சமையலறைப் பக்கம் போய்விட்டாள்.

சிவாவும் அவனது நண்பனும் பேசுவதை ஒட்டுக்கேட்டேன்.

''தமிழர்களோ முஸ்லிம்களோ கலவரத்தை ஏற்படுத்தல்ல. யாரோ வீண்ர்கள் கதைகட்டி விட்டாங்க. அதுதான் குழப்பத்திற் குக் காரணம்'' என்றார் வந்தவர்.

''அப்படியா இந்தப் பொய்க்கதைகள் கட்டுபவரைத்தான் சுட்டுத் தள்ளனும். டவுன் பக்கம் நிலம எப்படி?'' சிவா கேட்டான்.

''மூன்று முஸ்லிம்களுக்கு இவர்கள் அடிச்சிருக்காங்க. ராணுவம் வந்து கண்ணீர்ப் புகைக்குண்டு அடிச்சி ஆக்கள கலைச்சுப்போட்டாங்க. நானும் ஓடியந்திட்டன். ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கு. குடிக்கத்தான் முடியாமப் போச்சி'' என்றான் வந்தவன்.

''யார் பெண்டிர் யாரோட போனா உனக்கென்ன? உலகம் பெரண்டாலும் உனக்கென்ன? சாராயமிருந்தா உனக்குச் சரி'' என்றான் சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''படிக்கிறபோது பழகிட்டன். கூடாதவங்களோட கூடினதால வந்தவின'' வந்தவன் பேசினான்.

''கெட்டபின் ஞானம்வந்து என்னபயன்? அண்ணாச்சி எனக்கு கொஞ்சம் படிக்கிறவேலை இருக்கு. உள்ளே போப்போறன். வேற என்ன?'' சிவா சொன்னான்.

''நீ படிச்சி படிச்சி இரு. நான் போயிற்றுவாறன். வந்தவன் போய்விட்டான். இப்போதுதான் எனக்கு நிம்மதியாக மூச்சு வந்தது. பொலிஸார் ரோந்து சென்றனர். ஊர் அமைதியானது. மனித நடமாட்டம் குறைந்தது. தெரு வெறிச்சோடிப் போனதாக சிவா சொன்னான்.

மாலை சாய்ந்தது. ''சாந்தா எங்களுக்கு டீ கொண்டாரும்'' என்றான் சிவா. சிறிது நேரத்தில் இருவரும் தேனீர் பருகினோம்.

''நான் வீட்டுக்கு ஒரு கோல் எடுக்கணும் சிவா''
''எடும்''
நான் சிவாவின் வீட்டுத் தொலைபேசி ரிஸீவரை கையில் எடுத்தேன். என்வீட்டு நம்பரை சுழற்றினேன்.

மனைவி ''ஹலோ'' என்றாள் காதிற்கு இனிப்பாகியது.
''நான்தான் பேசுறன்''
''எங்கிருந்து? நான் சொன்னதை கேட்காம வெளிக்கிட்டுப் போய் எங்க மாட்டிக்கு நிக்கீங்க?''
''எங்கேயும் மாட்டல்ல. சிவா அண்ணன்ட வீட்டதான் நிக்கிறன்.''
''அப்பா... இப்பான் நிம்மதி மூச்சு வருகிது. என்டாலும் எனக்கு பயமாயிருக்கி. யாராவது கண்டுட்டானென்றால் பிரச்சினையாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும்"

''சிவா என்னை உள்ளறையில் வெச்சிருக்கார். சிவா வெளிய நின்றவாறு யாரும் வந்தா கதைச்சி அனுப்பிருவார். பயப்படாத. நாளைக்கு நிலமை சரியானா வாறன். அப்ப வைக்கட்டா?"

''மகள் கதைக்கணுமாம். இன்னா புள்ள"

''டடி கவனமா இருங்க குழப்பத்திற்க வரவேணாம். பார்த்து வாங்க டடி"

''சரி மகள் அல்லாஹ் காப்பாத்துவான்" என்றவாறு ரிஸீவரை வைத்தேன்.

''நஜிமுடீன் கவலைப்படாதே. நாளைக்கு சரிவந்திரும். நாளைக்கு நீ போகவேணாம். அடுத்தநாள் போ" என்றவாறு வந்தான் சிவா.

வெளிப்புற மின் விளக்குகளைப் போட்டுவிட்டு உள்ளே இருந்த அனைத்து விளக்குகளையும் அணைத்தான். ஹோலில் மட்டும் ஒரு விளக்கு எரிந்தது.

இரவு எட்டு மணிபோல் உணவு பரிமாறப்பட்டது. என்னால் அதிகம் சாப்பிடமுடியாமல் போய்விட்டது. சிவாவின் வற்புறுத்தலால் கொஞ்சம் சாப்பிட்டேன். பத்து மணிவரை தொலைக்காட்சி பார்த்துவிட்டு உறங்கச் சென்றேன். சற்று நேரத்தில் சிவா தூங்கி குறட்டை ஒலிவிட்டான். சிவாவின் மனைவியும் பிள்ளைகளும் அடுத்த அறையில் தூங்கி சிறு சிறு ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தூக்கம் வரவில்லை. கட்டிலில் உருண்டேன். சிந்தனை சுழன்றது.

''எல்லா இனத்திலும் இனவெறியர்களும் இருக்கின்றார்கள். இதற்கு அப்பால் நல்ல உள்ளம் படைத்தவர்களும் இருக்கின்றார்கள். எல்லாவற்றையும்விட சிவா மனித நேயம் மிக்கவனாக இருக்கின்றான். சிவாவைப் போல் எல்லோரும் இருந்தால் நம்நாட்டில் இனப் பிரச்சினையே வந்திருக்காது'' என்று நினைத்த நான் சிவாவை மேலும் மனதால் பாராட்டிக் கொண்டு மின்விசிறியை மெதுவாக சுழலவிட்டு உறங்கச் சென்றேன். நள்ளிரவு ஒரு மணி என்பதை என் கைக்கடிகாரம் காட்டியது. ஒரு மணிக்கு பிறகு என்னையறியாமல் தூங்கி விட்டேன்.

கதவு தட்டப்படும் ஒலிகேட்டு விழித்தேன். கதவைத் திறந்தேன். தேனீர் கோப்பையோடு சிவா நின்றான்.

''நல்லாப் பயந்துபோய் இருந்திருக்கிறாய். நள்ளிரவுக்குப் பின்புதான் தூங்கியிருக்க வேண்டும். முகத்தைப் பார்த்தா விளங்குது. இந்தா நஜீம் டீயைக் குடி'' என்றவாறு சிவா நின்றான்.

தேனீரை வாங்கிக் குடித்தேன். ஆறுமணிக்கு ஊரடங்குச் சட்டத்தை நீக்கிவிட்டார்கள். வாகனங்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தன. மனிதர்களின் நடமாட்டமும் கூடியது. நேரம் ஏழு மணியாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நஜிமுடீன் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு இருந்தெல்லாம் தமிழாக்கள் வந்திருக்கி. குழப்பம் அடங்கிட்டுபோல. நீ பகல் சாப்பிட்டு கொஞ்சம் பார்த்துப்போ'' என்றான் சிவா.

''அக்கரைப்பற்றிலிருந்து தமிழாக்கள் வாறென்டா குழப்பம் நின்டுட்டு. நான் போகலாம்'' என்றேன்.

''டேய் அவசரப்படாதடா. பார்த்துப் போகலாம்'' என்று தடை விதித்தான் சிவா. கலவரம் அடங்கியதால் எனக்கு நிம்மதி மூச்சு வந்தது. சிவாவின் வீட்டுத் தெருவால் முஸ்லிம்களும் போகவரத் தொடங்கினார்கள். சிவாவிடம் சொல்லிவிட்டு நானும் வீட்டை நோக்கி பயணத்தை ஆரம்பித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்போடு நெருப்பு....!

இஸ்மத்தைப்போன்ற ஒருவனை நான் இதுவரை கண்டதில்லை. பொறாமையின் மொத்த வடிவம். அவனை முதன்முதலாக கண்டபோது கள்ளம் ஏதுமின்றி நல்லவனாக இருப்பான் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் கள்ளத்தின் இருப்பிடம்தான் அவனுள்ளம் என்பதை தெரிந்து வேதனைப்படு கின்றேன்.

எனது வீடு அமைந்திருந்த சுற்று வட்டாரத்தில்தான் திருமணம் செய்து வாழ்ந்தான். வீட்டுக்கு அருகாமையில் இருப்போரிடம் அன்பாக இருக்க வேண்டும் என்ற நல்ல பழக்கத்தை கடைப்பிடிக்கும் நான் திருமணம் செய்துவந்த அடுத்த தினமே அவனது வீட்டுக்குப் போயிருந்தேன். மணமக்களை வாழ்த்தி பரிசுப் பொருட்களும் கொடுத்துவிட்டு வந்தேன். அதன்பின் சுமார் ஒருவருடம் இஸ்மத்தும் அன்பாகத்தான் இருந்தான்.

நாளடைவில் அவனது நடைமுறையில் மாற்றத்தைக் கண்டேன். பேசுகின்றபோது வெறுப்பாகவே பேசுவான். முகம் கொடுத்து பேசமாட்டான். எதைப் பேசுகின்றோமோ அதற்கு எதிர்மாறாக பேசுவான்.

அன்றொரு நாள் அவளை முன் தெருவில் கண்டேன். ''கண்டு கொள்ளவே முடியல்ல. சொகமா இருக்கீங்களா?'' என்று கேட்டேன். பேசாமல் நின்றிருக்கலாம். முறையல்லவே என்றுதான் பேசினேன்.

6424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொகத்துக்கு என்னையாம் குறை? ஆயிரம் வேலை. எப்படி காணப்போறீங்க?'' என்று சற்று உறைப்பாகவே சொன்னான். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. வீட்டில் ஆயிரம் இருக்கும் என்று அத்தோடு விட்டுவிட்டேன். அதன்பின்னர் காணும் போதெல்லாம் முகத்தை வெட்டிக்கொண்டு போய்விடுவான்.

இப்போதெல்லாம் என்னைக் கண்டால் நிமிர்ந்தும் பார்க்க மாட்டான். என்னைவிட தாழ்ந்த நிலையிலுள்ள ஒருவனோடு பேச ஏன் நான் ஆசைப்பட வேண்டும்? அடுத்த வீட்டுக்காரன் என்பதால் அடிமையாக வேண்டுமா? இஸ்மத் எலிஸபெத் மகாரணியின் கணவன் போல்லவா எண்ணி நடக்கின்றான். இப்போது இஸ்மத்தோடு பேசுவதை தவிர்த்துக் கொண்டேன்.

அன்று என் முகத்துக்கு முன்னே நின்றான். நான் பேசினால் எதிர்த்துப் பேசுவான். அல்லது பேச விரும்பாதவன் போல போய்விடுவான். இதனால் நானாக பேசுவதில்லை என்ற முடிவுடன் நின்றேன். இஸ்மத் காறி உமிழ்ந்துவிட்டு சென்றான். எனக்கு செய்வதுபோல் இருந்தது. முட்டாளுடன் வாக்குவாதப் படக்கூடாது என்று ஒன்றும் பேசாமலே விட்டுவிட்டேன். இப்போ தெல்லாம் சண்டைக்கு வலிய இழுப்பவன் போலிருக்கிறான் இஸ்மத்.

பக்கத்து வீட்டுக்காரன் என்று எவ்வளவு அன்பாக பழக நினைத்திருந்தேன். அவன் எதிர்மாறாக நடக்க முனைந்தான். நான் வார்த்தையால்கூட வதை செய்யவில்லை. ஏன் இப்படி மாறினான் என்பது புரியாத புதிராகவே இருந்தது.

இரண்டு வீடுகள் தள்ளி இருக்கும் சாஹீர் நேற்று என் வீட்டுக்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவன் இஸ்மத் இரிக்கானே, சரியான பொறாமை பிடிச்சவன். அல்லையயல்காரன்களோட எரிச்சலா இரிக்கான். என்னைப்பத்தி கூடாம முஸம்மிலிடம் பேசி இருக்கிறான். உன்னைப்பத்தி கூடாம என்னிடம் சொல்லியிருக்கான். நான் ஒரு நாளைக்கு நேரடியா கேட்கத்தான் இரிக்கன். நாமெல்லாம் உத்தியோகம் பார்க்கிற அவனுக்கு எரிச்சலா இருக்கு. பத்தாம் வகுப்புக்கூட ஒழுங்கா பாஸ் பண்ண முடியாதவனை தெருக்கூட்டுற வேலைக்கும் எடுக்கமாட்டாங்க. இது தெரியாம லோங்ஸோடும் ஷைபல்களோடும் திரிஞ்சாரு'' என்றான் சாஹிர்.

''நான் நெனைச்சிற்றன் வேலைகிடைக்கப் போகுதாக்கும என்டு. பத்தாம் வகுப்பும் ஒழுங்காக பாஸ் பண்ணமுடியாதவன் என்று எனக்கு தெரியாதே. அவர்ர லோங்ஸூம் பேச்சும் டிகிரி முடிச்சவன்போல காட்டும்'' என்றேன் நான்.

''சமீர் மடையன்களுக்கு நடிப்புத்தானே மிச்சம்'' என்றான் மீண்டும் சாஹிர்.

''மக்கன்களுக்கு நடிப்பு மட்டும் இருந்தால் பரவாயில்லை. கூடவே பொறாமையும் இரிக்கே'' என்றேன் நான்.

''அந்த பொறாமைதான் அவர்களை அழிக்கும் ஆயுதம்'' என்றான் சாஹீர். இது எவ்வளவு அர்த்தமுள்ள வார்த்தை.

''நமக்கு அந்த பொறாமை வேணாம். நாம நல்லா இரிப்போம். இஸ்மத் அவனைப் பத்தி பெரிசா நெனைச்சதுதான் மிச்சம். ஒழுங்கா மனைவி மக்களுக்கு சாப்பிட கொடுக்கவும் முடியாதவன். நம்மைப்போல உழைக்க தெரியாதவனுக்கு பொறாமைதான் மிச்சம். பொண்டாட்டியை சொந்தக்காரர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்

வீட்டுக்கு கூட்டிக்கு போய் திண்டு திரியிறவன். ரோஷம் இல்லாதவன்'' என்றேன்.

''சூடு சொரனை இல்லாதவன் அப்படித்தான் இரிப்பான். நம்மால அப்படி இருக்க முடியுமா?'' கேட்டான் சாஹிர்.

''முந்தநாள் யாருக்கோ ஏசிக்கிற்று இருந்தான். காது கொடுத்து கேட்டேன். யாருக்கென்று தெரியல்ல. பேசுகின்ற வசனம் காதில் விழுந்திச்சு. இவங்கெல்லாம் பெரிய ஆட்கள். பெரிய ஆபிஸரா இருந்தா எங்களுக்கென்ன? என்று சொன்னான். என்னையும் மறைமுகமாக சாடுவதுபோல் இருந்தது. நேரடியாக பேசாததினால எதுவும் நான் பேசவில்லை. கோழையின் பேச்சுக்கு பின்னால போகேலாதே!'' என்றேன் நான்.

''அப்போ.... அவனுக்கு சற்று தள்ளி நான் நிண்டதை நீ கண்டியா?'' சாஹீர் கேட்டான்.

''ஆமா நான் கண்டன். யாருக்கு அவன் ஏசின?'' நான் கேட்டேன்.

''கோழைகள் மறைமுகமாக ஏசினா நாம ஏதும் கேட்கப்போடா. உனக்கு ஏசல்லியே என்பான்.'' என்றான் சாஹீர்.

''இவனெல்லாம் இப்படி பேசி பெரியவங்களாகிட முடியுமா? உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகா. அவங்கட பேச்சாலே தரமிழந்து போறாங்க''. என்றேன் நான்.

வானம் கறுத்துக் கொண்டு வந்தது. காற்று இசையெழுப்பியது. சூரியனின் கண்ணை மழை இருள் கவ்வ சூரியன் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தான். சில நமிடங்களில் மழை பெய்யும்போல தோன்றியது. சாஹிரும் நானும் உரையாடலை முடித்துக் கொண்டு அவரவர் வீடுகளுக்கு விரைந்தோம்.

இஸ்மத் மழை பெய்யப்போகிறது என்ற எண்ணம் இல்லாமல் வீதியில் நின்றான். அவ்விதம் அவன் நிற்பதென்றால் ஒன்று யாரையாவது பொறாமைப்பட்டு ஏசுவதற்காக இருக்கும். அல்லது பெண்கள் வருவது தெரிந்து உரையாட நிற்பதாக இருக்கும். அந்நியப் பெண்கள் என்றால் அவனுக்கு கரும்பு. பேச பேச ஒரு விருப்பு. அவனது மனைவி அதனை தடுப்ப தில்லை. அவளுக்கு அந்நிய ஆடவனோடு உரையாடுவ தில் இன்பம். இருவருக்கும் அக்கரை பச்சை.

மிஸ்ரியா ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தாள். அவளது பெயர் மிஸ்ரியாவாக இருந்தாலும் ராணி என்றுதான் எல்லோரும் அழைப்பார்கள். பெற்றோர்கள் அவ்விதம் அழைப்பதால் அதுவே எல்லோரும் அழைக்கும் பெயராகியது. ராணியின் கணவன் சவூதியில் வேலை பார்க்கிறார்.

''ஆ.... ராணி உன்நடையில் நாட்டியம் இருக்கே'' என்றான் இஸ்மத்.

''நாட்டியம் மட்டுமா? எல்லாம்தான் இருக்கும். பெண் என்றால் கவர்ச்சி இருக்கணுமே'' என்றாள் ராணி. இஸ்மத்தின் அருகே நின்று கொண்டாள்.

''கவர்ச்சி இருந்து என்ன செய்ய? கட்டியணைக்க கணவன் இருக்கணுமே! ஏங்கி ஏங்கி ஒல்லியா போனாய்'' என்றான் இஸ்மத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கொரு ஏக்கமும் இல்லை. பெண் என்டா ஒல்லியாத்தான் இருக்கனும். உங்க பொண்டாட்டி கொழுத்து வாறா. எதுக்கும் நல்லமில்லை'' என்றாள் ராணி.

''நல்லமில்லைதான் கொழுத்து போறாள். என்ன செய்யலாம்? நீ அழகாகத்தான் இருக்கே. பயனில்லாம சும்மா இருக்கியே!'' என்றான் இஸ்மத். கணவன் யாரோ பெண்ணுடன் பேசுவது கேட்டு ஓடிவந்தாள் இஸ்மத்தின் மனைவி. சிரித்தவாறு நடையை தொடர்ந்தாள் ராணி.

''இந்த சிறுக்கியோடு நீங்க பேசக்கூடா, உள்ளுக்கு வாங்க. இவளுகள் புருஷன் சவூதிக்கு போனா கண்ணியமான முறையிலே இருக்க வேண்டியதுதானே! அதில்லாம தெருவுக்கு தெரு திரிவாங்க. ஆம்புளைகளை கண்டா இழிச்சுக்கொண்டு நிற்பாங்க. சந்தர்ப்பம் கிடைச்சா மானத்தையும் இழப்பாங்க. இனி இவளோட பேசுவதைக் கண்டா கெட்ட கோபம்வரும். புருஷன் சவூதி யிலே இருக்க இங்கு மச்சானோடு படுத்தவளா யிற்றே'' என்றாள் இஸ்மத்தின் மனைவி.

மனைவிக்குத் தெரியாமல் அவளது வீட்டுப் பக்கம் போய் உறவாட வேண்டியதுதான் என தீர்மானித்தவனாய் வீட்டுக்குள் வந்தான் இஸ்மத். மழை வேகமாக பொழிய தொடங்கியது.

''அதிருக்கட்டும் முன் வீட்டுக்காரன் சமீன் இருக்கிறானே, இவர்பெரிய ஓபிஸர் என்டா நமக்கென்ன? அவரை மதிச்சு நடக்க வேண்டிய அவசியம் நமக்கில்ல'' என்றான் இஸ்மத்.

''அதுக்கென்ன இப்போ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவனை இனி நான் மதிக்கமாட்டேன்.''

''நடந்தது நடக்காதது உனக்கு தேவல்ல. நான் சொல்றன். உன் கணவன் சொல்றன். அவனோட இனி பேசப்படா. அவன்ட பொண்டாட்டியோடயும் பேசப்போடா. என்ன?'' என்று கூறி பேச்சை நிறுத்தினான் இஸ்மத்.

''ஏன் வெறுப்பா பேசிறீங்க?'' இஸ்மத்தின் மனைவி ரபீக்கா கேட்டாள்.

''அவர் பெரிய ஓபிஸர் என்டா எனக்கென்ன? அவரை மதிச்சு நான் நடக்கணுமா? நான் தொழிலாளி. அவரை கும்பிடு போடணுமா?'' என்றான் மீண்டும் இஸ்மத்.

''அவன் அப்பிடி சொன்னானா? இல்லியே. ஏன் கோபப்பட்டு குழம்புறீங்க?'' என்றாள் ரபீக்கா.

''நான் ஒண்டும் கொழம்பல்ல. பெரிய பணக்காரங்க பெரிய பதவியில இருக்கிறவங்க அவரோட உறவாடுறாங்க. எங்களை மதிக்கப்போறல்ல. இப்படியானவனோடு ஏன் உறவு வைக்கணும்? என்றான் இஸ்மத்.

''உங்களை மதிக்காம சமீர் நடந்தாரா? எப்போ? எப்படி? கேட்டாள் ரபீக்கா.

''அதுகளை தவிர்க்கத்தான் இந்த முடிவு. நான் அவனோடயும் அவன்ட மனைவியோடும் பேசிறல்ல. அவனோட நீ பேசிறதை யும் நிறுத்தி வைச்சாய். இனி அவன்ட மனைவியோடும் பேசக்கூடா. என்ன சொல்றாய்?'' கூறிவிட்டு கேட்டான் இஸ்மத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி ஏதும் பேசினால் இஸ்மத்திற்கு கோபம்வரும் என்று வாய் மூடினாள் ரபீக்கா.

இஸ்மத்தின் மனைவி இப்போது எனது மனைவியுடனும் பேசுவதில்லை. ஒரு குடும்பத்தின் நிலை ஆண்களின் மனநிலையை பொறுத்திருக்கும் என்பது எவ்வளவு உண்மை. இஸ்மத் எல்லோரின் வெறுப்பையும் பெற்று வருகின்றான்.

மிஸ்ரியா என்கின்ற ராணியின் வீட்டுக்கு இரவு நேரங்களில் இஸ்மத் சென்று வருவது பலருக்குத் தெரியும். இக்கதை இஸ்மத்தின் மனைவி ரபீக்காவிற்கும் எட்டியது.

''என் கணவர் கூடாத முறையில் நடக்கமாட்டார். சும்மா கதைச்சிருப்பார். ஊர்தானே கதை கட்டும்'' என்று அலட்சியமாக பேசினாள் இஸ்மத்தின் மனைவி ரபீக்கா. இதனால் இஸ்மத் தடையின்றி ராணியோடு பழகினான். கணவனில்லாத குறை அவளுக்கு எங்கே இருக்கப்போகிறதென ஊரவர்கள் பேசிக் கொண்டார்கள்.

சாஹீர் நீண்ட நாட்களுக்குப் பின்னர் என்னை சந்திக்க வந்திருந்தான்.

''கேட்டீயா சங்கதியை?'' என்று கேட்டவாறு வந்தான் சாஹீர்.

''நொடிப்போடாம சொல்''

''சமீர் ஊர் கெட்டுப்போச்சு. உதுமான் ரைவர்ர மகள் ராணி என்ன மோசமானவள். இஸ்மத்தின் வைப்பாட்டியா இருக்காளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் புருஷன் வெளிய இருந்து சுளைசுளையாக அனுப்புகிறான். நன்டி இல்லாம இவ இங்க நடக்கா" என்றான் சாஹீர்.

''புருஷன் இருக்கிறப்போ மச்சானையும் வைச்சுக் கொண்டவ. அந்த காமப்பேய்ர கதை நமக்கு தேவல்ல" என்றேன் நான்.

''இஸ்மத் கெட்ட மனமுள்ளவன். கெட்டவனோட சேர்ந்த நல்லவளும் கெட்டுப்போக இடமிருக்கு. இஸ்மத்தின்ர மனைவி ரபீக்கா வீடுகளெல்லாம் மேஞ்சு திரியிறாளாம்'' சாஹீர் சொன்னான்.

''ஒருவன் மனைவிக்கு துரோகம் செய்து வாறப்போ மனைவி நிச்சயம் அவனுக்கு துரோகம் செய்யிற நிலைவரும். இப்ப இல்லாட்டியும் எப்பேயாவது வந்துசேரும். ரபீக்கா மிச்சம் மரியாதையானவள். இஸ்மத்தின் திரிச்சலால் ரபீக்காவின் திரிச்சல் எங்குபோய் முடியுமோ?" என்றேன் நான்.

மல்லிகை
(ஜூலை 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னம் பிள்ளையும் பிள்ளையும்...

''மரம் தறிக்கப்போகின்றார்கள் என்பதை கேள்விப்பட்டிருந்தால் அப்படியே எல்லோரையும் ஒரு நாள் முழுக்க பொலிஸ் கூட்டில் போட்டிருக்கலாம். நான் அடுத்த ஊரில் இருந்த படியால் மரம் தறிக்கப்பட்ட பின்னர்தான் - அதுவும் இரவான பின்தான் செய்தி அறிந்தேன். ஒரு மனிதனுக்கு இடைஞ்சலான மரத்தைத்தான் தறிக்க முடியும். வீட்டை சுற்றி தனது தென்னை மரங்களை வைத்துவிட்டு அடுத்த வீட்டுக்காரனின் காய்க்கும் தென்னை மரங்களை தறிப்பவனை சட்டப்படி தண்டிக்க முடியும். கூட்டில் அடைக்கும் நிலமை நழுவிப்போய்விட்டது. விடியட்டும். நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நஷ்ட ஈட்டையும் பெற்று தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று ஏக்கத்துடன் உறங்க முடியாமல் பதறிக் கொண்டிருந்தான் சந்திரன்.

பக்கத்து வீட்டுக்காரர்களான சுதன் மாஸ்டரும் ஜெயசீலனும் சேர்ந்துதான் மரத்தை தறித்தார்கள். இவர்கள் இருவரும் சந்திரனோடு கொண்ட வேண்டா வெறுப்பு பொறாமை என்றும் சொல்லலாம். அதுதான் இந்நிகழ்விற்குக் காரணம். சும்மா கிடந்த நிலத்துண்டை சுற்றி மதில் கட்டி வீடுகட்டத் தொடங்கிய பின்னர்தான் விழிக்க தொடங்கினார்கள். அவர்களின் பொறாமை உரமேறியது.

வீடு கட்ட முன்னர் தந்தை கொடுத்த காணித்துண்டை பார்க்க சென்றிருந்தான் சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வா... சந்திரன். மிச்சநாளைக்குப் பிறகு ஊருக்கு வந்திருக் கீங்க. ஊரை மறந்து போனீங்க?'' என்று கேட்டார் சுதன் மாஸ்டர்.

''ஊரை மறக்கல்லே. எனக்கு நேரம் கிடைக்கல்லே. அதான் வரல்ல. அடுத்தமாசம் எனக்கு மாறுதல் ஊருக்கு கிடைக்கும். ஊரிலிருந்து அஞ்சு மைல் இந்த ஊர். கிழமைக்கு ஒருக்கா வந்து பார்த்திட்டு போகலாம். என்ர இடத்த நான்தானே பார்க்கணும். ஊருல சிலர் இருக்காங்க. காட்டில் இருக்கிறதை விட பயங்கரமானவங்க. கதை, செயல் எல்லாத்திலயும் கள்ளம் வச்சு பழகுறாங்க. எந்த நேரத்திலே கழுத்தறுப்பாங்க என்டு சொல்ல முடியா. அதான் அப்படியானவங்களோட பழகவே பயப்படுறன். அப்படியானவங்கட தொடர்பு எனக்கு தேவல்ல'' என்றான் சந்திரன்.

''ஓ.. அது சரிதான். பொறாமைக்கு பெயர்போன ஊர் ஆச்சே'' என்றான் அடுத்த பக்கத்துவீட்டுக்காரன் ஜெயசீலன்.

இப்படியாக ஊருக்கு போகின்ற நேரமெல்லாம் அன்பு காட்டி பழகுவார்கள் சுதன் மாஸ்டரும் ஜெயசீலனும். அவர்களின் மனதிற்குள்ளே குடிகொண்டிருக்கும் 'கள்ளம்' சந்திரனுக்கு எங்கே தெரியப் போகின்றது!

வீடு கட்டுவதற்கு அத்திவாரத்தை பலமாக இட்டான். பிறகு ஒரு காலத்தில் மேல்மாடி கட்டுவதற்குரிய விதத்தில் அத்தி வாரத்தை இட்டிருந்தான். சந்திரன் வந்துள்ளதை கண்டதும் ஜெயசீலனும் சுதன் மாஸ்டரும் ஓடிச் சென்றார்கள்.

பொது நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னத்துக்கு பணத்தை விரயமாக்குகின்றீங்க? சாதாரணமாக அத்திவாரத்தை போட்டா போதும்தான்! உங்களுக்குத்தான். பெரிய வீடு இருக்கே'' என்றான் ஜெயசீலன்.

''உங்களுக்கு பொம்புளை புள்ளையும் இல்லே. கட்டி என்ன செய்யப் போறீங்க?'' ஒருபோடு போட்டான் சுதன் மாஸ்டர்.

''பொம்புளை புள்ள இல்லண்டு எப்படி சொல்ல முடியும்? இனி பொறந்திட்டா?'' என்றான் சந்திரன்.

இருவரும் அதற்குமேல் பேசாமல் போய்விட்டார்கள். வீட்டைக் கட்டினான் சந்திரன். சுதன் மாஸ்டரும் ஜெயசீலனும் சந்திரனை கண்டால் பேசுவதில்லை. எவர் பேசாவிட்டாலும் சந்திரனுக்கு எந்த கவலையும் இல்லை. பொறாமை கொண்டோர் பேசுவதை விட பேசாமல் இருப்பதே மேல் என்பதை உணர்ந்தவன் சந்திரன். போலிகளின் உறவை விரும்பாதவன்.

ஒரு நாள் வந்து ''உன்ர ரெண்டு தென்னை மரங்களையும் தறித்துப்போடு'' என்றார்கள் ஜெயசீலனும் சுதன் மாஸ்டரும் ஒருமித்து.

''ஏன் சொல்றீங்க?'' எனக் கேட்டான் சந்திரன்.

''ஒருமரம் என் வீட்டு பக்கமும் மற்றமரம் ஜெயசீலன் வீட்டுப் பக்கமும் சரிந்திருக்கின்றன. எங்களுக்கு ஆபத்து'' என்றான் சுதன் மாஸ்டர். சிரித்துக் கொண்டான் ஜெயசீலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘உங்களின் வீட்ட சுற்றி தென்னைமரம் இருக்கு. எங்கே உள்ள என்ர தென்னை மரத்தை தறிக்கச் சொல்றீங்க. நான் தறிக்கமாட்டேன்’’ என்று ஒரேயடியாக மறுத்துவிட்டான் சந்திரன். அதன்பின்னர் உறவாக இருந்த சந்திரனுக்கும் பக்கத்துவீட்டு ஜெயசீலன், சுதன் மாஸ்டருக்கும் இடையே உறவில் விரிசல் ஏற்பட்டது. அவர்களுக்குள் பொறாமை தீயாக எரிந்தது.

‘‘சந்திரன்... உனது தென்னைமரம் எங்கேயோ இருக்கிறது. தறிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களது வீட்டைச் சுற்றி அவர்களது மரமே இருக்கிறது. அதைத்தறித்துக் கொள்ளட்டும்’’ என்று ஊரவர்களே நியாயம் சொல்ல தொடங்கினார்கள்.

‘‘பொறாமை என்பது இதுதான். எங்கே உள்ள எனது தென்னை மரங்களை தறிக்க சொல்கிறார்கள். மாதம் நூறு தேங்காய் காய்க்கும். இப்படியான தென்னை மரத்துக்கு நான் அநியாயம் செய்யமாட்டேன் என்று தீர்மானித்தவனாக ஊருக்குப் புறப்பட் டான் சந்திரன்.

அவன் ஊரில் இல்லாதநேரம் பார்த்து மரத்தை தறித்தவர்கள் ஜெயசீலனும் சுதன் மாஸ்டரும். இப்படிவரும் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். வருடக் கணக்காக பணம் செலவழித்து நீதிமன்றப்படி மிதிக்கின்றார்கள். மரத்தை தறித்தால் நமக்கு என்னவரப் போகின்றது என்றுதான் அவர்கள் செய்திருக்கிறார்கள். முட்டாள் தனத்தால் நீதிமன்றம் மூலம் பணம் செலுத்த வேண்டிவரும் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘அவர்களது வீட்டை சுற்றி அவர்களது மரமே இருக்கின்றது. சந்திரனின் தென்னைமரம் இருபது யாருக்கு அப்பால் உள்ளது என்று சந்திரனின் சட்டத்தரணி நீதவானுக்கு எடுத்துக் கூறினார்.

‘‘ஐசே.. அப்படியா...’’ என்றார் நீதவான்.

அடுத்தமாதம் இடத்தை பார்வையிட்டு தீர்ப்பளிப்பதாக நீதவான் கூறினார். ஜெயசீலனுக்கும் சுதன் மாஸ்டருக்கும் இப்போதுதான் பீதி ஏற்படத் தொடங்கியது. சும்மாகிடந்த சங்கை ஊதி கெடுத்தாற்போல்.

ஒவ்வொரு தவணைக்கும் இடையே இடைவேளை மாதக் கணக்கில் கொடுப்பதினால் சில சம்பவங்களையும் காணக்கூடிய தாகிவிடுகின்றது.

சுதன் மாஸ்டரின் ஐந்தாவது மகள் வீட்டு முற்றத்தில் மண்சோறு ஆக்கி விளையாடிக் கொண்டிருந்தாள். அவ்விடத்தில்தான் விளையாடுவது வழமை. அன்று எதிர்பாராத விதமாக அவர்களது மரத்தில் இருந்து முற்றிய தேங்காய் பிள்ளையின் தலையில் விழுந்தது. தலைவெடித்து இரத்தம் பீறிட்டது. விரைவாக வைத்தியசாலைக்கு எடுததுச் சென்றார் சுதன் மாஸ்டர். துரிதமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. தலை வெடித்து அதிக இரத்தம் வெளியேறியதால் பிள்ளையை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்று வைத்தியர் கூறிவிட்டார்.

‘‘தறிக்கவேண்டியது எனது மரம்தான். சந்திரனின் தென்னம் பிள்ளையை வீணாக தறித்ததிற்கு என் பிள்ளையையே இழக்க வேண்டி வந்துவிட்டது.’’ என்று சுதன் மாஸ்டர் நினைத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சம் அவனது நெஞ்சை விட்டு மாறாது.

அடுத்த தவணையும் வந்தது. சந்திரன் தரப்பு சட்டத்தரணி சுதன் மாஸ்டரை குறுக்கு கேள்வி கேட்க தொடங்கினார்.

''சந்திரனின் தென்னைமரத்து தேங்காய் உன் பிள்ளையில் விழாவிட்டாலும் உன் வீட்டு எல்லைக்குள்ளாக விழுந்தது உண்டா?''

''இல்லை''

''அப்படியானால் எங்கே உள்ள மரத்தை தறித்துவிட்டீர். அப்படித்தானே?...''

''.......''

''பதில் பேசமுடியாது. சந்திரனின் மரத்தை தறிக்காமல் உன் மரத்தை தறித்திருந்தால் உன் பிள்ளையை காப்பாற்றி இருக்க முடியும். இரு தென்னம்பிள்ளை தறித்து உன்பிள்ளை இறக்கவும் காரணமாகிவிட்டாய். எங்களுக்கும் அது துக்கம் தான்! என்ன செய்வது? நல்ல செயல்பாடுதான். நல்லவைகளை தோற்றுவிக்க முடியும். கனம் நீதவான் அவர்களே ஒருநாளை ஒதுக்கி தாருங்கள். தென்னை மரம் இருந்த இடத்தை பார்வையிட'' என்று நிறுத்தினார் சந்திரன் தரப்பு சட்டத்தரணி.

நீதவான் ஜெயசீலனையும் சுதன் மாஸ்டரைப் பார்த்துக் கேட்டார்.

''நான் பார்வையிட வேண்டுமா? பார்வையிடாமல் ஐம்பதினாயிரம் கட்டப் போகின்றீர்களா?''

இருவரும் பேசாமல் நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பார்வையிட வேண்டுமா?'' மீண்டும் நீதவான் கேட்டார். மௌனம் சாதித்தார்கள்.

''மௌனம் சம்மதத்தின் அறிகுறி. தூரத்திலிருந்த மரத்தை தறித்து அநியாயம் செய்துவிட்டீர்கள். மாதம் நூறு தேங்காய் காய்க்கும் மரத்தை தறித்தது பெரும் கொலை. ஆளுக்கு முப்பதினாயிரம் இரண்டு மாத தவணைக்குள் கட்ட வேண்டும். இல்லையானால் மூன்று மாதகால சிறை'' என்றார் நீதவான்.

ஜெயசீலனுக்கும் இப்போதுதான் பயம் தொற்றியது. தனது வீட்டு முற்றத்தில் நிற்கும் மரத்தால் தனது பிள்ளைகளுக்கும் ஆபத்து ஏற்படுமா என்று தான் பயந்தான்! தன்வினை தன்னைச் சுடும் என்பது சுதன்மாஸ்டருக்கும் ஜெயசீலனுக்கும் தெரியாமல் போய்விட்டது! நஷ்டஈடு செலுத்துவதைத் தவிர வேறுவழி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் வழியில்...!

வள்ளியம்மைக்கு வயது அறுபதை தாண்டிவிட்டது. இருந்தாலும் வயதை குறைத்து சொல்வதில் அவளுக்கு தனி இன்பம்.

நாற்பது வயதில் கணவனை பிரிந்துவாழ தொடங்கிய அவள் வாழ்க்கை, கணவன், குடும்பம் என்பதை பற்றி கவலைப்படுவதில்லை. வளமாக கணவன், குடும்பம், பிள்ளை என்று வாழ்பவளைவிட கவலையற்றவளாக தன்னை காட்டிக் கொள்வாள். சுருங்கக்கூறின் வாழ்க்கை என்பதன் 'பதமே' தெரியாதவள். கணவனோடு வாழ்கின்ற காலத்தில நான்கு பிள்ளைகளை வருடமொன்று என்று பெற்றுக் கொண்டவள். குறுகியகால வாழ்வில் தேடிக்கொண்ட செல்வங்கள்.

''ஏன் அம்மா அப்பாவை பிரிந்தீர்கள்'' என்று புத்தி வந்து பிள்ளைகள் கேட்டபோது ''அவர்போக்கு கூடாதம்மா. அவருக்கு நிறைய மனைவிமார்கள்'' என்று கூறி தப்பிக் கொள்வாள் வள்ளியம்மை. ஆனால் அடுத்த தெருவில் இருக்கின்ற சுகுமாரியை திருமணம் செய்து பல்லாண்டு காலமாக தந்தை வாழ்வது பிள்ளைகளுக்கு தெரிந்த கதை. இருந்தாலும் அம்மாவை அரித்து கேட்பதில்லை.

வள்ளியம்மை அயலவரோடு நெருக்கமாக பழகமாட்டாள். பிள்ளைகள் நெருக்கமாக அயலவர்களின் வீடுகளுக்கு சென்றாலோ வேரோடு உறவை வெட்டிவிடுவாள். பயத்தினால் பிள்ளைகள் போகமாட்டார்கள். இரண்டு பெண் பிள்ளைகளும் அடக்கமாகத்தான் இருக்கிறார்கள். திருமணத்திற்கு பின் எப்படி ஆவார்களோ தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியம்மை எங்காவது மாப்பிள்ளை கேட்டுவிட்டு வீடுவருதற் கிடையில் மாப்பிள்ளை வீட்டுக்கு போய் வள்ளியம்மையையும் குடும்பத்தையும் பற்றி தரக்குறைவாக சொல்லிவிடுவார்கள். இதனால் மூத்த மகள் பிரியாவின் திருமணம் தடைப்பட்டுக் கொண்டே வந்தது.

மூத்த மகளுக்கு அரசாங்க தொழில் செய்யும் ஒருவனை மாப்பிள்ளையாக்க வேண்டும் என்ற விருப்பில் எங்கெல்லாம் மாப்பிள்ளை கேட்டு பார்த்துவிட்டாள். சீதனம் இல்லாத அவளால் முடிந்த காரியமா? இறுதியாக தபால் பியூன் சிறிதரனை மாப்பிள்ளை கேட்டுச் சென்றாள் வள்ளியம்மை.

தன்னிடமுள்ள நான்கு ஏக்கர் காணியையும், வீடுவளவையும் அத்துடன் ஒருலட்சம் பணமும் தருவதாக உறுதி கூறினாள் வள்ளியம்மை. சிறிதரன் பியூன் அல்லவா! சம்மதித்துக் கொண்டான்.

இரண்டு நாட்களுக்கு பின்னர் வள்ளியம்மையின் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரன் மகேஸ், சிறிதரனை சந்தித்து இருக்கிறான்.

''சிறிதரன் உன்ட நன்மைக்காக சொல்கிறேன். வாழ்க்கை ஆயிரம் காலத்துப் பயிர். அப்பா இல்லாம வளர்ந்தவ பிரியா. அவ ஒரு அடக்கம் இல்லாதவ. கதைக்க தொடங்கினா லேசில வாயை மூடமாட்டாள். எங்கட பக்கத்துல வாயாடி என்ர பெயரெடுத்தவ. பிடிவாதக்காரி. திருமணம் முடிச்சி கவலை படுறதவிட விலகிக்கொள்ர நல்லது. அதுமட்டுமல்ல 'லவ்' என்ற மோகத்திலே ஆபிஸர்மார் பலரோட பழகி இருக்கிறா. அவர்களை வழைச்சி கணவனாக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டுதான். ஆனா அவனுகள் பொழுதை போக்கிவிட்டு பணக்கார இடத்திலே கல்யாணம் பண்ணிக்கிற்றானுகள். இதனால அவவை இப்ப லவ் பண்ண யாரும் இல்ல. விஷயம் தெரிஞ்ச எவனும் லவ் பண்ணமாட்டான். அவட அம்மாவும் பார்த்தா மகள் ஓபிஸர் யாரையும் வசைச்சி எடுத்திருவாள் என்டு. அது நடக்கல்ல. அவட வீட்டுப்பக்கம் யாரும் போறல்ல. இப்ப மாப்பிள்ளை கேட்டு அலையுறா" என்றான் மகேஸ்.

கெட்டவர்களின் பிள்ளைகள் கெட்டவர்களாகத்தான் இருப்பார்கள் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆனால் இவர்கள் கெட்டவர்களாக இருக்கலாம்" என்று குறுக்கிட்டு பேசினான் சிறீதரன்.

''நான் வள்ளியம்மையையும் பிள்ளைகளையும்தான் சொல்கிறேன். கணவனைவிட பொல்லாதவள் இந்த வள்ளியம்மை. தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்பார்கள் புரியாதா? கணவன் கெட்டவனாக மாறுவதற்கு இந்த வள்ளியம்மைதான் காரணம். இதற்கு சின்னதொரு உதாரணம் சொல்கிறேன். வள்ளியம்மையை திருமணம் செய்கின்றபோது அவளது கணவன் சிகரெட்கூட குடிப்பதில்லை. திருமணம் செய்தபிறகு மது, கஞ்சா, அபீன் என்று சகல போதை வஸ்துகளும் பாவித்தார். இதிலிருந்து என்ன விளங்குது? குடிகாரனை திருத்தி இருக்கிறார்கள் சில மனைவியர்கள். வள்ளியம்மை கணவனை குடிகாரன், கொலைகாரன், பெண்பிடிகாரனாக மாற்றியிருக்கின்றாள் என்றால் அவள் எவ்வளவு கொடியவளாக இருப்பாள்! அவளின் பராமரிப்பில் வளர்ந்த பிள்ளைகள் எப்படி இருப்பார்கள்? என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தினான் மகேஸ்.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்று கவிஞர் சொன்னது உண்மைதான், சூழலுக்கேற்றவாறுதான் பிள்ளைகள் மாறுவார்கள்'' என்றான் சிறீதரன்.

''அது உண்மை. பிரியா வளர்ந்த சூழல் பயங்கரமான சூழல். மகளை யாராவது காதலிக்கட்டும் என்று தாயே பார்த்துக் கொண்டிருந்த சூழல். எவரோடெல்லாம் எப்படியெல்லாம் பழகி இருக்கிறாள் இந்த பிரேமா. அதிகம் சொல்லாமல் ஒரு சம்பவத்தை மட்டும் சொல்கிறேன். அதை கேட்டுவிட்டு திருமணம் செய்வதோ விடுவதோ உன் விருப்பம். கேளும்.

''சுகந்தன் என்ற ஆசிரியரை பிரியா காதலித்துக் கொண்டு வந்தாள். திருமணம் செய்வதை அவன் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தான். தாய்க்கும் மகளுக்கும் சந்தேகம் வலுத்தது. பொழுது போக்கிற்காக காதலிக்கின்றானோ என்று சந்தேகப்பட்டார்கள். அதனால் சுகந்தனின் காதலுக்கு முழுக்குப் போட்டுவிட்டாள். கச்சேரி ஆபிஸர் ராஜனை கைக்குள் போட்டாள் பிரியா. அவளுக்கு வள்ளியம்மைதான் தொடர்பை ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றாள்.

ஒரு நாள் கச்சேரிக்குப் போயிருக்கிறாள் வள்ளியம்மை. பிறப்பு இறப்பு பதிவுக் காரியாலயத்தில் ராஜன்தான் முக்கிய பதவி வகித்துக் கொண்டிருந்தான். இருக்கின்ற நேரம் வீட்டுப் பக்கம் வா மகன் என்றிருக்கிறாள் வள்ளியம்மை. ராஜன் திருமணம் செய்யாதபடியால் பொழுது போக்காக போய் வரத் தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னான். பிரியாவின் வெளேரென்ற கன்னங்களும் சிவந்த உதடும், மெல்லிய இடையும் ராஜனுக்கு போதையை ஏற்றியது. வள்ளியம்மையிடம் விடயத்தை சொல்லி இருக்கிறான். காத்திருந்த வள்ளியம்மை இன்பத்தால் மகிழ்ந்தாள்.

காதல் பாடம் தினமும் விரிந்தது. ராஜன் வந்தவுடன் வள்ளியம்மை வீட்டைவிட்டு வெளியிறங்கி விடுவாள். பிரேமா. டீயூசனுக்கு போய்விடுவாள். பிரியா ராஜனோட கதைத்து மகிழ்வாள். சிலவேளை முத்தங்களும் பரிமாறப்படும். வாரங்கள் மாதங்களாயின. பிரியாவோடு நீண்ட நேரம் உறவாடிவிட்டுத் தான் செல்வான் ராஜன். அன்றும் அப்படித்தான்! நேரம் போய்க் கொண்டிருந்தது. வள்ளியம்மையால் மேலும் பொறுக்க முடியவில்லை. அவள் கண்ட காட்சி... ராஜனும் தனது மகள் பிரியாவும் தங்களை... மறந்த நிலையில் படுக்கையறையில்! உடனே சத்தமிட்டிருக்கின்றாள் வள்ளியம்மை.

இருவரும் எழுந்து தங்களை சீர் செய்து கொண்டார்கள்.
''ராஜன் நீங்க இதுக்கிடையில் இப்படி போவீங்க என்று நான் நினைக்கல்ல. நாளைக்கு கல்யாண முடிவோடதான் வரணும்'' என்றிருக்கிறாள் வள்ளியம்மை.

அன்று போனவன்தான் ராஜன். பிரியா செல்லையா டாக்டருக்கிட்ட போய் இன்ஜெக்ஷன் போட்டதாக ஊரே சொல்லிச்சு. ராஜனுக்கிட்ட போய் நீங்களே கேட்டுப் பாருங்கள்'' என்று நிறுத்தினான் மகேஸ்.

''யாருக்கிட்டேயும் கேட்கிறல்ல. பிரியாவை நான் திருமணம் செய்யவேமாட்டேன்'' என்றான் சிறீதரன். சந்தோஷத்தினால் விடை பெற்றான் மகேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் சிறிதரனின் வீட்டுக்கு சென்றபோதுதான் மகளின் திருமணம் நின்று போனதை உணர்ந்தாள் வள்ளியம்மை. திருமணநாள் குறித்து வந்திருப்பாள் அம்மா என்று எதிர் பார்த்திருந்த பிரியா ஏமாற்றமடைந்தாள்.

''நீ ராஜனோட நடந்து கொண்ட விதத்தை யாரும் சிறீதரனுக்கு சொல்லி இருக்கலாம். எல்லாவற்றையும் உன்ர கட்டுப்பாடற்ற செயல்தான் கொடுக்குது. சொன்னா கேட்கமாட்டாய்'' என்றாள் வள்ளியம்மை.

''நான் யாரையாவது லவ் பண்ண விரும்பினேனா? நீதானே சொன்னாய். இவனை லவ் பண்ணு. அவனை லவ் பண்ணு என்று! தொடர்ந்து பழகிக் கொண்டு வந்தா கட்டுப்பாட்டை மீறவேண்டி வரலாம்தானே அம்மா. வேதநாயகம் பரிசாரியோட எவ்வளவு நெருக்கமாக நீங்க பழகினீங்க. கற்ப இழக்காம பழகி வந்தீங்க. அப்பா உங்களை பிரிஞ்சபிறகு அவர் உன் கணவன்போல வருஷக்கணக்கிலே நடந்தாரே! நான் வீட்டிலி ருந்தா எங்கெண்டாலும் போகச்சொல்வீங்களே. இதெல்லாம் தப்புதானே அம்மா. திருமணம் செய்து பலவருஷங்கள் வாழ்ந்த நீங்களே இன்னொருவரோடு உறவு வைச்சபோது நான் காதலிக்ககுள்ளே கொஞ்சம் தடுமாறியதை பெரிசா பேசுறீங்களே!'' என்றாள் பிரியா.

''நீ வாழ வேண்டியவள். நான் வாழ்க்கையை முடித்தவள். நான் எப்படி நடந்தாலென்ன? நீ கவனமாக இருந்திருக்க வேண்டும்'' என்றாள் வள்ளியம்மை.

''ராஜன் வந்தவுடன் நீ வெளியிறங்கி செல்வாயல்லவா அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வேதநாயகம் பரிசாரி வந்தவுடன் நான் வெளியிறங்கி போவேன் அல்லவா? அந்த நினைவுதான் வந்ததம்மா. ஒரு பெண்பிள்ளை கெட்டுப்போவதென்றால் தாய்க்குத்தான் முக்கிய பங்குண்டு என்பது எவ்வளவு உண்மை" என்றாள் பிரியா.

வள்ளியம்மைக்கு எதுவும் பேசமுடியாதநிலை தோன்றியது. பிரியா கெட்டமைக்கு வள்ளியம்மையன்றி வேறு யாரும் காரணமல்ல. மீண்டும் பிரியா தொடர்ந்தாள்.

''நடந்தது நடந்து போயிற்று. எனக்கு வாழ்வுதர யாரும் முன்வந்தா வாழுவேன். இல்லையோ இப்படியே இருந்து செத்துப் போறன். கவலைப்பாடாதே அம்மா" என்றாள் பிரியா.

''நான் வாழ்ந்து கெட்டவள். நீ வாழாமலே கெட்டுப் போய் பட்டமரமாய் நிற்பதை நான் பார்த்து மகிழலாமா?" என்றாள் தாய் வள்ளியம்மை.

"எதற்கும் ஒரு காலமுண்டு. அதுவரை பொறுத்திற்று இருப்பேன்" என்றாள் பிரியா.

''என்னாலே என்மகளின் வாழ்வு இருண்டு போயிற்று. காதல் வலையில் யாரையாவது சிக்கவைத்து பிரியாவுக்கு மாப்பி ள்ளையாக்கலாம் என்று நினைத்தது மாபெரும் தவறாகிவிட்டது. எனது தவறான போக்கு மகளையும் தவறாக நடக்க செய்து விட்டது. என்று உள்ளூர வருந்தினாள் வள்ளியம்மை.

நடந்தது நடந்ததுதான். இனி நடக்கப்போவது...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமெல்லாம் எழுத்தாகுமா?

கமால்தீன் அலுவலக மேசை மீது தலையை வைத்துப் படுத்திருந்தான். அவன் மேசைமீது பணிபுரியும் அதிகாரியுமல்ல. எழுதுவினைஞருமல்ல! சாதாரண பியூன். மேலதிகாரி உணவுக்கு சென்றபின் சுதந்திரமாக தலையை வைத்துப் படுத்துக் கொண்டான். தனது தரத்தில் கடமையாற்றும் நியாஸூம் கூடவே இருந்தான்.

''நியாஸ் பெண்களைப்பத்தி நானெழுதிய கவிதையை படித்துப் பாரேன்'' என்று தினமனி பத்திரிகையை நீட்டினான் கமால்தீன். அவனொரு கவிஞனும் கூட. வாங்கி படித்தான் நியாஸ்.

''பெண்களின் கண்களையும் கன்னத்தையும், இடையையும் தொடையையும் பற்றி வர்ணித்து எழுதுவதால் யாருக்கு என்ன பயன்? ஒருவேளை பெண்களுக்கு கர்வம் பிடிக்கலாம்'' என்றான் நியாஸ்.

''அதையும் அழகுற சொல்வதற்கு கவியாற்றல் வேணுமே'' என்றான் கமால்தீன்.

''மக்களுக்கு பிரயோசனம் வரும்வகையில் எழுதவேணும். மக்களின் கஷ்ட நஷ்டங்களை எழுது. முந்தி அப்படி எழுதினாய். இப்ப பொருட்பால் போய் ''காமத்துப்பால்'' மட்டும் எழுதும் மோகக் கவிஞன் நீ'' என்று கிண்டலாக சொன்னான் நியாஸ்.

''மோகம்தான் மனிதனின் முதல் தேவை. அதிலதான் உலகமே தோன்றிச்சு'' என்றான் கவிஞன் கமால்தீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாயிற்று. இளைய தலைமுறையினர் நிறைய எழுதுறாங்க. தரமான கவிதை மட்டுமல்ல. சிறுகதை, நாவல், கட்டுரை என்று எழுதுறாங்க. சமுதாய சீர்திருத்த கருத்துக்களை எழுதுறாங்க. மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பிருக்கு. உன்கவிதையை நீயே பாராட்டணும்'' என்றான் நியாஸ்.

''இருடா... புதிதாக கவிதைநூல் வெளியீட்டு காட்டுறன்''

''போடா அந்த நாளையில எப்படியோ ஒரு புத்தகத்தை வெளியிட்டிட்டாய். பெரிசா கதைக்கிறாய். ஹரீஸ் புத்தகத்துக்கு மேல புத்தகம் வெளியிட்டு வாறான். அதுவும் தரமான படைப்புகள். உன்ர எழுத்து ஒரு வட்டத்துக்குள்ளே நிக்கு'' என்றான் நியாஸ்.

''நான் வெளியிடப்போறதை ''தேன் மொழி சேர்ந்து'' கவிதை நூலை வெளியிட்ட பின் பாரேன். எனக்கு வரப்போற பேரையும் புகழையும்'' என்றான் கவிஞன் கமால்தீன்.

''அதையும் பார்ப்போமே'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் நியாஸ். கமால்தீனின் உள்ளத்தைபோய் தைத்தது நியாஸின் பேச்சு.

''ஹரீஸ் கவிதைக்குமேல் கவிதை, கதைக்குமேல் கதை என்று புத்தகங்கள் வெளியிட்டுக் கொண்டே இருக்கிறான். இதனால் என்னைப் போன்றவர்களின் புகழ் மங்கிக் கொண்டு போகின்றது. என்னால் அவனுக்கு ஈடுகொடுத்து எழுத முடியாது. பல்லாண் டுக்கு பிறகு ஒரு புத்தகத்தையாவது வெளியிடாவிட்டால் இலக்கிய உலகில் இருந்து என் பெயர் அடிபட்டுப் போகும். எப்படி ''தேன்மொழி சேர்ந்து'' நூலை மந்திரி எம்பிமாரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து ஜனங்களுடன் வெளியிட வேண்டும். அறிமுகவிழா இரண்டு மூன்று செய்வதற்கு யாரையாவது பிடிக்க வேண்டும். ஹரீஸை கண்டால் எனக்கு கொஞ்சமும் பிடிக்காது. என்னைவிட அதிகம் அதிகமாக எழுதுகின்றானே! பேரும்புகழும் பெற்றுக்கொண்டு வருகின்றானே! நானொரு இலக்கியவாதி என்பதை வாசகர்கள் மறந்துவிடுவார்கள்! இவனுகளெல்லாம் அதிகம் எழுதாவிட்டால் எனக்கு புகழ் இருக்கும். இவனுகள் அதிகம் எழுதி என் புகழை அழிக்க வந்திட்டானுகள்'' எனப்பல எண்ணினான் கமால்தீன்.

''இப்பவே தேன்மொழி கற்பனையிலே கலக்கிறாய் போல'' என்றான் சக ஊழியர் நியாஸ். சிந்தனையிலிருந்து விடுபட்டான் கமால்தீன்.

''கற்பனை, சிந்தனை என்பன இலக்கியவாதிகளின் சொத்துக்கள். அதன் மூலமாகத்தானே ஆக்கங்கள் படைக்கின்றோம்'' என்றான் கமால்தீன்.

''உனது சிந்தனையைவிட இளைய தலைமுறையினரின் சிந்தனை மேலோங்கிவிட்டது'' என்றான் நியாஸ்.

''உனக்கு நான் என்றால் கிண்டல்தான்'' என்றான் படைப்பாளி கமால்தீன்.

மாதங்கள் சில மறைந்தன. எப்படியோ பழைய கவிதையையும் சேர்த்து தொகுப்பை அச்சிட்டு முடித்தான் கமால்தீன். வெளியீட்டு விழா தலைநகரில்தான் செய்ய வேண்டுமென்ற பிடிவாதத்தை செயலாக்க முனைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர்கள் எம்பிக்களின் வீடுகளுக்கு படையெடுத்தான். நண்பர்களின் துணையுடன் கால்களில் விழாக்குறையாக விழுந்தான். அவர்களும் விளம்பரம் தேடி மேடைகளில் ஏறுவதை விருப்பாக கொண்டபடியால் கமால்தீனின் எண்ணம் ஈடேறியது. பல எம்பிக்களும் அமைச்சர்களும் வெளியீட்டு விழாவிற்கு வருவதாக ஒப்புதல் கொடுத்தார்கள்.

''நியாஸ்... நீ என்ன நெனைச்ச? ஹரீஸின் புத்தக வெளியீட்டுக்கு வருவதுபோல இருபது முப்பது பேர் அல்ல. மந்திரிமாரும் வருவதால் ஆயிரக்கணக்கில் வருவாங்க. இருந்துபார்.'' பெருமையடித்தான் கமால்தீன்.

''எத்தனை ஆயிரம்பேர் வந்தால் என்ன? அவன்ட எடத்தை உன்னால பிடிக்கேலா. அவன் எழுத்துலகில் முடிசூடா மன்னனாகிற்றான். அன்றாடம் நடக்கின்ற அவலங்களை கதையாக, கட்டுரையாக, கவிதையாக படைக்கின்றான். அவனை எழுத்துலகமே பாராட்டி கௌரவிக்கின்றது. நீங்க யாரை பிடிச்சாலும் வேலை இல்லை'' என்றான் நியாஸ்.

''கூட வேலை செஞ்சாலும் என்னோட சரியான கோபம் உனக்கு'' என்றான் கமால்தீன்.

''உன்மையை சொன்னா அப்படித்தான் தெரியும். முந்தி ஒரு கவிதைநூல் வெளியிட்டாய். நல்லா இருந்திச்சு. இப்ப அழகையும் பெண்களின் வனப்பையும்தான் பாடுகிறாய். திரை மறைவில் நடக்கின்ற விடயங்களை முகத்துக்கு முன் கொண்டு வருகின்றான் ஹரீஸ். அவன் கொடிகட்டிப் பறப்பதை நீயும் பார்க்கத்தான் போகிறாய். நீ சுடலை ஞானம் பேசாம சும்மா இரு, நான் போய் டீ ஒன்று குடிச்சிட்டுவாறன்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டான் சக ஊழியர் நியாஸ்.

''என்னை இவனுகள் எல்லாம் முந்திட்டாங்களே! ஹரீஸை முளையிலே கிள்ளலாம் என்று பார்த்தேன். முடியாம பெயித்து. அவர்ர வெளியீட்டு விழாக்கெல்லாம். நான் போறல்ல. எனக்கு தெரிஞ்ச நண்பர்களை எல்லாம் போகாது தடுத்திருக்கன். என்டாலும் அவன்ட புத்தகங்கள் வித்துப்போகுது. அரச தனியார் நிறுவனங்கள் போட்டியிட்டு வாங்குது. நான் பத்து வருஷத்துக்கு முன்னே வெளியிட்ட புத்தகம் இருநூறுக்கு மேல இன்னம் இருக்கு. இன்னும் ரெண்டு வருஷத்திலே ஒரு டசின் புத்தகத்தை வெளியிட்டிருவான். பத்திரிகை, சஞ்சிகைகளும் அவன்ட புத்தகத்தை என்னமா பாராட்டி எழுதுது. கடைசியா அவன் வெளியிட்ட புத்தகத்துக்கு விழாவே வைக்கல்லே. ஒரு பிரதி அவனுக்கிட்ட இல்லாம கூட்டாளிக்கு வித்த புத்தகத்தை கேட்டு வாங்கினானாம்! என்ர கவிதைப் புத்தகத்தை கொழும்பிலே வெளியிட்டு ஜனத்திரளை காட்டி விற்பனையை கூட்டி என் பெயரை காப்பாத்த போகிறேன்'' என்று பலவாறு கற்பனை பண்ணினான் கவிஞர் கமால்தீன்.

இனி எதுவும் பேசக்கூடாது. செயலைக்காட்டி பேரும் புகழும் பெற வேண்டியதுதான் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்தான் கமால்தீன். காலம் கை கொடுக்குமா?

கொழும்பு நகரசபை மண்டபத்தில் வெளியீட்டுவிழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கால்பிடிப்பதில் காக்காய் பிடிப்பதில் கமால்தீன் உயர்ந்துதான் போனான். பெயர் பெற்ற எழுத்தாளர்களும் இவ்விதம் செய்யவில்லை. தமிழ்பேசும் அமைச்சர்கள் எம்பிக்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமுகர்கள் பலரும் வந்திருந்தார்கள்.

சிறப்பு பிரதிகள் என்று பலநிறுவனங்களின் உரிமையாளர்கள் பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

ஒரு சிற்றுரை, ஒரு தேனிசை என்று மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருந்தன. புத்தக வெளியீடா? கலை நிகழ்ச்சியா? என்று சொல்ல முடியாத அளவிற்கு இருந்தது. மேடையின் மத்தியிலே கவிஞர் கமால்தீன் சந்தோஷத்தால் மீசையை தடவிக் கொண்டிருந்தார்.

''இன்றைக்கு எனக்கு ஐம்பதினாயிரம் வரும். செலவோடு இலாபமும் சேர்ந்து வரும். யாரும் நினைத்துப் பார்க்க முடியாத வருமானம். எந்த இலக்கியவாதியும் எனக்கு ஈடாகமாட்டார்கள். இந்த பணத்தைக் கொண்டு அடுத்த அடுத்த புத்தகங்களையும் வெளியிடலாம்'' என்று சந்தோஷ மழையில் நனைந்திருந்தான் கமால்தீன்.

விழா எப்படியோ முடிந்தாயிற்று. பெரிய இடத்தில் பெரிதாக செய்தபடியால் மண்டப செலவு, ஒலிபெருக்கிச் செலவு, சிற்றுண்டிச் செலவு, போக்குவரத்துச் செலவு என்று இருபதினாயிரம் செலவாகிவிட்டது. கமால்தீன் கொழும்பிலிருந்து நண்பர்களுடன் வீடுவந்து சேர பன்னிரெண்டாயிரம்தான் எஞ்சியது. ஊரில் விழா வைத்திருந்தாலோ இருபதினாயிரம் சேர்த்திருக்கலாம். என்று மனம் வருந்திக் கொண்டான் கமால்தீன்.

ஊரில் இரண்டொரு அறிமுகவிழா செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி தன் சொந்த ஊரிலும் தொழில் புரியும் ஊரிலும் அறிமுகவிழா வைத்தான். இரண்டிலும் சேர்ந்து பத்தாயிரம்தான் வந்தது. முக்கிய பிரமுகர்களுக்கு ஒருசில புத்தங்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டதால் இதுவரை மொத்தம் நூற்றி ஐந்து புத்தகங்களே விற்கப்பட்டன. அதுவும் இலக்கியவாதிகளுக்கு விற்கப்படவில்லை. பணம் படைத்தவர்களுக்கே விற்கப்பட்டன. இலக்கியம் என்றால் என்னவென தெரியாதவர்களுக்கே விற்கப்பட்டன. சுமார் ஐந்நூறு புத்தகங்கள் அப்படியே இருந்தன. விற்கமுடியாமல் தடுமாறினான் கமால்தீன். அவனது எண்ணமெல்லாம் இடிவிழுந்த மரமாகியது.

அவன் சிற்றூழியராக கடமைபுரிவதால் கிடைத்த பணம் எல்லாம் அன்றாடச் செலவுகளுக்கே பயன்பட்டன.

''ஹரீஸோடு போட்டிபோட்டு மூக்குடைபட்டதுதான் மிச்சம். இனி அவன் ஒன்பதாவது புத்தகத்தை வெளியிடப் போகிறான். அவன் பலவாறாகவும் சிந்திக்கின்றான். கதை, நாவல், கவிதை என்று சகல துறைகளிலும் கால்பதித்து வருகின்றான். இனி அவனோடு போட்டியிடுவது முட்டாள்தனம். அவனைப்போல எழுத என்னால் முடியாது. மற்றவர்கள் என் படைப்புக்களை பார்த்துக் கிண்டல் பண்ணுவதுதான் மிகுதியாகிவிடும். இனி எழுத்துக்கு பிரியாவிடை'' என்று எண்ணி முடிவெடுத்தான் கமால்தீன்.

குறுகிய வட்டத்திற்குள் சிந்திக்கும் கமால்தீன் ஹரிஸின் பரந்த சிந்தனையை இப்போதுதான் உணர்ந்திருக்கின்றான்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலறுந்த பட்டம்

காலைப்பொழுது மலரவில்லை. கண் விழித்தவாறு படுத்திருந் தார் ஆப்தீன் மாஸ்டர். இன்று அவரது பொதுச் சேவைகளுக் காக விழா எடுக்கின்றார்கள். இல்லை விழா எடுக்க வைத்துவிட்டார் ஆப்தீன் மாஸ்டர். சந்தோச மிகுதியால் வழமைக்கு முன்னதாக விழித்துக் கொண்டார்.

''மக்களை ஏமாற்றுவது மிக இலகு. அவர்களது பணத்தாலே நான் பெயர் எடுக்கின்றேனே! நினைக்க சிரிப்புத்தான் வருகின்றது" என நினைத்துக் கொண்டார் ஆப்தீன் மாஸ்டர்.

செல்வர்தர்களிடம் சென்று வாசிகசாலை திறக்கப் போகின்றேன். பாலர் பாடசாலை திறக்கப் போகின்றேன். ஏழைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப் போகின்றேன் என்று சொல்வார். வசதியுள்ளவாகள் அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள். எவ்வளவு பணம் பெற்றார். எவ்வளவு கொடுத்தார்கள் என்பது அவரது கழகப் பொருளாளருக்கே தெரியாது. ஆப்தீன் மாஸ்டர் வாயால் கூறுவதுதான் கணக்கு. அதைத்தான் பொருளாளரும் எழுதிக் கொள்ள வேண்டும். வெறும் கணக்குக்கு மட்டும்தான் பொருளா ளர். பொருள், பணம் எல்லாம் ஆப்தீன் மாஸ்டரிடந்தான்!

கழக உறுப்பினர்களுக்குத் தெரியாமல் பிற ஊர்களுக்கும் சென்று பணம் திரட்டி வருவார். மற்றவர்கள் நம்பக்கூடிய விதத்தில் றிசிட் அடித்தும் வைத்துள்ளார். றிசிட் அச்சிடுவதும் வெளியூரில்தான். அவற்றையெல்லாம் இங்கு செய்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் ஆதாயம் பெற முடியாதே! வெளியூருக்குச் சென்று பணம் திரட்டுவது அவர் மட்டும்தான். அது யாருக்கும் தெரியாது.

''சேர் நாம் கொழும்புக்குப் போய் பணம் அறவிட்டு வருவோமே'' என்று செயலாளர் றியாஸ் ஆப்தீன் மாஸ்டரிடம் கேட்டார். தலையில் அல்லவா கை வைக்கிறான் என்று நினைத்துக் கொண்டார் ஆப்தீன் மாஸ்டர்.

''மற்ற ஊர்களுக்கு போய் நாம கேட்டால் யார் நம்புறாங்க? நம்மள சந்தேகக்கண் கொண்டுதான் பார்க்கிறாங்க. கொள்ளையடிச்சிக்கு போக வந்திருக்கிறாங்க என்றுதான் நினைக்காங்க. வெளியூருல எல்லாம் இப்ப பணம் சேர்க்க முடியா'' என்றார் ஆப்தீன் மாஸ்டர். வெளியூரில் கத்தை கத்தையாக வாங்குவது பிடிபட்டுவிடும் என்றுதான் ஆப்தீன் மாஸ்டர் பயந்தார். மேற்கொண்டு செயலாளர் றியாஸ் பேசாமல் விட்டதனால் சிறிது ஆறுதலடைந்தார். தப்பினோம் பிழைத்தோம் என்று அடுத்த கட்டத்திற்கு அத்திவாரம் போட்டார்.

''இன்று பாராட்டு மட்டுமல்ல. எனது சேவையைச் சேர்த்து ஒரு பட்டமும் கொடுக்கச் செய்திருக்கிறேன். என்ன பட்டம் தரப் போகிறார்கள் தெரியாது. செயலாளர் றியாஸ் ஒரு கவிஞன் அல்லவா. தரமான சொல்லைத்தான் தேர்ந்து தருவான்'' என்று நினைத்தவாறு குளிக்கச் சென்றார் ஆப்தீன் மாஸ்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எங்காவது விழாக்கள், கூட்டங்கள் செல்வதென்றால் டையும் கட்டிக் கொண்டு டிப்டொப்பாகத்தான் போவார். இது அவரைப் பாராட்டி பட்டம் அளிக்கும் விழா. கோட்டும் போட்டுக் கொண்டார். மேடையிலே அறிவிப்பாளர் தனது திறமையைக் காட்டிக் கொண்டிருந்தார்.

''இன்னும் சில நிமிடங்களில் சேவையின் சின்னம், சிகரம் வருகைதர விருக்கிறார். பொதுச் சேவைக்காக சுய நலத்தை மறந்த ஒருவர் என்றால் ஆப்தீன் மாஸ்டர் என்று அடித்துச் சொல்லலாம். அவர் செய்த சேவைகள் கொஞ்சமா? அவருக்கு கொடுபடவிருக்கும் பட்டத்தை தற்போது சொல்ல முடியாது என்று கூறியுள்ளார் செயலாளர். அப்போது தெரிந்து கொள்வோம். நமதூரில் எத்தனையோ வாசிகசாலைகள், சிறுவர் பாடசாலைகள் தோன்ற ஆப்தீன் மாஸ்டர் அவர்களே காரணம். வெகுவிரைவில் விழா தொடங்கும். அதுவரை இன்னிசைக்கானங்கள்'' என்று நிறுத்தினார் அறிவிப்பாளர்.

''நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே...'' பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

மேடையில் தோரணம் கவர்ச்சியாக வர்ண மின் விளக்கு களோடு ஜொலித்தது. சிறுவர்களும் சிறுமிகளும் வேலையற்ற இளைஞர்களும் கூடத் தொடங்கிவிட்டார்கள். எங்காவது ஒலி பெருக்கி அலறினால் சிறுவர் கூட்டம் கூடுவது சொல்லத் தேவையில்லை. இளைஞர்களும் வயோதிபர்களும் அவர்களு க்கு சளைத்தவர்கள் அல்ல. எப்படியாவது பொழுது போக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று போட்டி போடுவார்கள். இடைக்கிடை அறிவிப்பாளர் தனது திறமையைக் காட்டத் தொடங்கினார்.

''இன்னும் சில நிமிடங்களில் எங்கள் சேவைச் சிகரத்திற்கு பாராட்டும் கௌரவப் பட்டமும் வழங்கப்படும். விரைவில் சேவை நாயகன் ஆப்தீன் மாஸ்டர் வருகை தரவுள்ளார். ஊர்ப்பெரியவர்கள், தலைவர்கள், கல்லூரி அதிபர்கள் மேடை முன் போடப்பட்டுள்ள நாற்காலியில் வந்து அமரலாம்'' என்று கூறி பாடல் ஒலிக்க இடம் விட்டுச் சென்றார் அறிவிப்பாளர்.

சில நிமிடங்களில் வானைப்பிழக்க பட்டாசுகள் கொழுத்தப் பட்டன. முன்னுக்கு சிறுவர்கள் முண்டியடித்துக் கொண்டு வந்தார்கள். பின்னால் பெரியவர்கள் வருவது தெரிந்தன. நடுவே ஒருவர் கோட்ஸ் சூட்டுடன் அவர்தான் ஆப்தீன் மாஸ்டர் வந்து கொண்டிருந்தார். அறிவிப்பாளர் மைக்கின் முன் -

''இதோ எங்கள் கதாநாயகன் சேவையின் சின்னம் ஆப்தீன் மாஸ்டர் கம்பீர நடையுடன் வந்து கொண்டிருக்கிறார். அவருக்கு மாலை அணிவித்து வரவேற்புக் கொடுக்க காத்திருக்கிறார் கழகச் செயலாளர் றியாஸ் அவர்கள்

எல்லோரது இதயமும் குளிரும் வண்ணம் சேவையாற்றிய ஆப்தீன் மாஸ்டர் ஒரு அருந்தவப் புதல்வன். தன்னலம் கருதாத பொதுநல வாதி. வாழ்த்தப்பட வேண்டிய ஒருவர். பட்டமளித்து கௌரவிக்க வேண்டியவர்களில் இவரும் ஒருவர். வாழ்க ஆப்தீன் மாஸ்டர்'' என்று அறிவிப்பாளர் கூறி நிறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியோசை காதைப் பிழந்தது. பதினைந்து நிமிடங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

செயலாளர் றியாஸ் ஆப்தீன் மாஸ்டருக்கு மாலை அணிவித்து வரவேற்றார். ஆப்தீன் மாஸ்டரை கோட் சூட்டில் பார்க்க ஒரு சட்டத்தரணிபோல் தோன்றினார். எல்லோருமே புகழ்ந்து பல மணி நேரம் பேசினார்கள். ஆப்தீன் மாஸ்டர் புகழ் பேச்சில் குளிர்காய்ந்து கொண்டிருந்தார். பேச எழுந்தார் செயலாளர் றியாஸ்.

''அன்புப் பெரியார்களே... அறிவுப் பெருமக்களே... என் இனிய சலாம் உரித்தாகுக. நேரடியாக விசயத்திற்கு வருவோம். உங்களுக்குத் தெரியும் ஆப்தீன் மாஸ்டரின் பொது நல சேவைபற்றி. அவர் தனக்காக வாழ்ந்தவர் அல்ல. எத்தனையோ பாலர் பாடசாலைகள், வாசிகசாலைகள், விளையாட்டரங்கு என்று ஆரம்பித்து வைத்தவர். அவரின் சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவித்து பட்டமளிக்க வேண்டியது நமது கட்டாயக் கடமை. அதற்காகத்தான் இன்று கூடியுள்ளோம். அவரின் சேவையைப் பாராட்டி ''சேவைத் தென்றல்'' என்ற பட்டத்தை வழங்குகின்றோம். எல்லோரும் ஒரு முறை கைதட்டுங்கள் என்று நிறுத்தினார் றியாஸ். எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். மீண்டும் பேசத் தொடங்கினார் செயலாளர் றியாஸ்.

''சேவைத் தென்றல் பட்டத்திற்குரிய பதக்கத்தை இதோ ஆப்தீன் மாஸ்டரிடம் கையளிக்கிறேன்'' என்று செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியாஸ கூறியதும் எழுந்து முன்னுக்கு வந்தார் ஆப்தீன் மாஸ்டர். இரு கைகளாலும் வாங்கிக் கொண்டார். அனைவரும் ஆரவாரம் செய்து கைதட்டிக் கொண்டார்கள். ஆள் மாறி ஆள் பேசிக் கொண்டிருந்தார்கள். மக்கள் கலையத் தொடங்கினார்கள். சில நிமிடங்களில் விழாவும் நிறைவுற்றது.

ஆப்தீன் மாஸ்டருக்கு சேவைத் தென்றல் பட்டம் அளித்து ஒரு வாரம் கடந்திருந்தது. றியாஸின் வீட்டுக்கு ஓடோடி வந்தி ருந்தார் பக்கத்து வீட்டு பசீர்.

''கேட்டிங்களா சங்கதி?'' என்றவாறு கதவைத் திறந்து கொண்டு வந்தார் பசீர். அவரது கையில் ஒரு கட்டு றிசிட் புத்தகம் இருந்தது.

''பசீர் உட்காருங்க'' என்று கதிரையைச் சுட்டிக் காட்டினார் கழகச் செயலாளர் றியாஸ்.

''கழகத்த வச்சி பொழச்சிருக்கிறார் ஆப்தீன் மாஸ்டர். இங்க பாருங்க றிசிட் புத்தகப் பிரதி. கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை என்று சென்று இலட்சக்கணக்கிலே சேர்த்திருக்கிறார். கொழும்புக்கு போறேன் என்று சொல்லி போனது இதுக்குத்தான் என்பது இப்பதான் தெரியும்'' என்றான் பசீர்

றியாசின் முகம் ஆத்திரத்தால் விகாரமாகியது. றிசிட் புத்தகத்தை புரட்டிப் பார்த்தார். கொழும்பிலுள்ள தனவந்தகர்களி டமிருந்து ஐயாயிரம் பத்தாயிரம் என பெறப்பட்டிருந்தது. ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்திலேயே ஒரு இலட்சத்திற்கு மேல் பெறப்பட்டிருந்தது. எப்படியோ பல இலட்சங்கள் பெறப்பட்டிருந்தன.

''பசீர் இது உங்களுக்கு ஏது?''

''கழிவுக்கடதாசியோடு சேர்த்து இதனையும் விற்றிருந்தார் ஆப்தீன் மாஸ்டர்''

''எவ்வளவு தைரியம் வேணும்? அவர் இதைத் தொழிலாக்கி உழைக்கத் தொடங்கிட்டார். எங்களை எல்லாம் மடயன் என்று நினைச்சிட்டார். கழக உறுப்பினர், பொருளாளர் எல்லோருக்கும் சொல்லி இன்றையோட கழகத்தின்ட பேச்சையே ஒழிக்கணும். அத்தோட ஆப்தீன் மாஸ்டர மானம் காத்தில் பறக்கிறாப்போல நாலு வார்த்தை பேசனும். அவர்ர கெட்ட தனத்திற்கு துண்டுப் பிரசுரம் அடித்து ஊரெல்லாம் கொடுக்க வேணும்'' என்றான் றியாஸ்.

வேடம் போட்டவர்கள் வெளியுலகத்திற்கு வரத்தானே வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புத விளக்கும் மெழுகு திரியும்...

‘‘இவன் ஜாயிஸ் என்ன முட்டாளாக இருக்கிறான். நேற்று முளைச்ச காளான். இப்பான் நாலுவரி எழுதத் தொடங்கியிருக்கான். அதிலும் ஆயிரம் எழுத்துப் பிழை. தினச்சுடர் பத்திரிகையில் உதவி ஆசிரியரின் கால்களைப் பிடித்து இரண்டொரு கவிதை எழுதியிருக்கிறான். வேறு எந்தப் பத்திரிகையும் ஜாயிஸின் படைப்பை வெளியிடவில்லையே! அப்படியிருக்க பாராட்டும் பரிசிலும் பெற்ற பல்லாண்டு காலமாக எழுதிவரும், எழுதி எழுதி குவித்துவரும் எழுத்தாளர் சுதனைப் பற்றி எவ்வளவு கேவலமாக பேசுறான். படுமுட்டாள் இந்தப் ஜாயிஸ்.

எட்டாத கனிகளைப் பார்த்துக் கொட்டாவி விடும் கோழை. இவனுக்கென்ன இலக்கியம் தெரியும்? இராமாயணத்தை படித்திருப்பானா? சிலப்பதிகாரத்தை தொட்டிருப்பானா? மகா பாரதத்தைக் கண்டிருப்பானா? அதுதான் போகட்டும். நல்ல இலக்கிய நூல்களைப் படித்திருப்பானா? நான்கு நல்ல புத்தகங்களையாவது படித்திருப்பானா? அவன் படித்தது படிப்பது பார்ப்பது எல்லாம் வெறும் காமம்தான்!

சூரியனைப் பார்த்து நாய் குரைப்பதுபோல இலக்கியத்தால் உயர்ந்தவர்களை பொறாமைக் கண்கொண்டு தாக்கி எழுத ‘தூறல்’ என்ற பெயரிலே சஞ்சிகை வேறு. தூறல் வெகு விரைவில் நாறலாகி ஓய்ந்துவிடும். நேற்று முளைத்த பிஞ்சே உன் நெஞ்சில் வளர்வது நஞ்சே. அதனால் நீ அழிவது பிஞ்சிலே. பொறுத்துப் பார் வருடம் அஞ்சிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் பெற்ற சிறந்த எழுத்தாளன் சுதனின் கால் செருப்புக்கும் தகுதியில்லாத இந்த குறட்டை ஜாயிஸிக்கு ஏன் இந்தச் செருக்கு?'' எனப்பல எண்ணினான் இளம் கவிஞர் இத்ரீஸ்.

சுதனைப்பற்றி தரக்குறைவாக ''தூறல்'' சஞ்சிகையில் எழுதியதை நேரடியாக சொல்ல சென்றான் இத்ரீஸ்.

''ஒழுங்காக ஒன்றும் எழுதாத ஜாயிஸ் இப்படி கீழ்த்தரமாக அதுவும் உங்களைத் தாக்கி எழுதுவதை எங்களைப் போன்ற இளம் எழுத்தாளர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. ஒழுங்கா பத்தாம் வகுப்பே பாஸ்பண்ண முடியாத படுமுட்டாள் ஜாயிஸ். இவனுக்கென்ன தெரியும்? பேனா எடுத்தால் பெருமேதை என்றா நினைக்க முடியும்? உங்கள் எழுத்துத் திறமைக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாராட்டும் பரிசும் தந்திருக்கிறார்கள். ஜாயிஸை ஒரு இலக்கியவாதியென்று யார் கணக்கெடுக்கப் போறாங்க?'' என்றான் இளம் கவிஞன் இத்ரீஸ்.

''சில்லறைகள் கல்லெறிவார்கள். இதையெல்லாம் நாம் கணக்கெடுக்கப்போடா. அற்பர்கள் அற்பர்கள்தான். கால் தூசிக்கும் சமனில்லாத நக்கித் திரிந்த நாய்கள் என்ன எழுதினாலும் எனக்கொன்றும் கவலையில்லை. எனக்கு புகழ் குறையப் போவதுமில்லை. என்னைப் போல அவனால் எழுதவும் முடியாது'' என்றான் எழுத்தாளன் சுதன்.

''உங்கள் படைப்புக்களை சகல பத்திரிகை சஞ்சிகைகளும் போட்டி போட்டு பிரசுரிக்கின்றன. ஜாயிஸின் படைப்புக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பத்திரிகை சஞ்சிகை வெளியிடுகின்றன? அவர் அச்சடித்து சும்மா கொடுக்கனும்" என்றான் இத்ரீஸ்.

6424

"எங்களைப் போன்றவர்களைத் தாக்கி எழுதுவது அவரின் அழிவுக்கு ஒரு வழி. கெடுவான் கேடு நினைப்பான் என்பது எவ்வளவு உண்மை. சென்ற இதழ் விற்றதைவிட குறைய இப்ப விற்கும். இந்த முறை விற்றதை விட குறைய அடுத்த முறை விற்கும். படிப்படியாக மூடுவிழா நடக்கும். இருந்து பார் இத்ரீஸ்" என்றான் எழுத்தாளன் சுதன்.

"இப்பவும் சிலர் சும்மாதான் வாங்கிறாங்க. பணம் கொடுக்கிறல்ல. நல்லவர்களைத் தாக்குவது நாசமாக ஒரு வழி. நீங்க சிறுகதைப் போட்டி, நாடகப் போட்டி, கவிதைப் போட்டி என்று போட்டியிட்டு பரிசு வாங்கியிருக்கீங்க. இவன் பரிசுதான் வாங்கல்ல. எந்தப் போட்டியில பங்கு பற்றியிருக்கான்? கோழை. தலையிலே மலமுள்ள இறால். ஒழுங்கான குடும்பத்தில் பிறக்காதவன்" என்றான் இத்ரீஸ்.

வெட்டுற குழியில் அவங்க அவங்கதான் விழுவாங்க. உயர்வையும் தாழ்வையும் அவங்க அவங்கதான் தீர்மானிக்கிறாங்க. இதைப்பற்றி நாம ஏன் கவலைப்படணும்? இத்ரீஸ் உங்கட தூர நோக்கு நல்லாயிருக்கி. தரமான கவிதையெல்லாம் வீரகேசரியில் எழுதுறீங்க. பாராட்டுக்கள். தொடர்ந்து எழுதுங்க. உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. பொறாமை கொண்டு நல்லவர்களை தாக்கி எழுதுபவர்கள் காலப் போக்கில் எழுத்துலகில் இருந்து ஒதுங்கிவிடுவார்கள். நல்லவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுவது நல்லவர்களின் செயல். தீயவர்கள் தீயவைதான் செய்வார்கள்" என்றான் எழுத்தாளன் சுதன்.

''எங்கள் ஊரிலிருந்து பேருக்கு முன்னால் ஊரையும் சேர்த்து எழுதி ஊரை பிரபல்யப்படுத்தியது நீங்கள். பல பரிசுகளை பெற்று ஊருக்கு பெருமை தேடித் தந்தவர் நீங்கள். எங்கள் ஊரிலிருந்து யாரும் பெறாத பரிசை பெற்றவரும், மேலும் மேலும் பெற இருப்பவரும் நீங்கள். படிப்புமில்லாத இலக்கியமும் தெரியாத ஜாயிஸ் வெறும் ஜாயிஸ்தான்! இவரைப் பாராட்ட பரிசு கொடுக்க இலக்கிய உலகில் மடையர்கள் இல்லை. மடையன் ஜாயிஸுக்கு நல்லவர்கள் பெரியவர்களின் பெருமை தெரியப் போவதில்லை" என்றான் இத்ரீஸ்.

''அவன் படுமுட்டாளாக இருப்பதனால்தானே இலக்கியத்தில் அதியுயர்ந்த பட்டத்தைப் பெறவிருக்கும் என்னைத் தாக்கி எழுதுகின்றான். விரைவில் வெட்கப்பட்டு வேதனையடைவான்" என்றான் எழுத்தாளன் சுதன்.

இத்ரீஸ் எழுத்தாளன் சுதனிடம் விடைபெற்று போய்விட்டான்.

இலக்கியவாதிகள் எல்லோரும் ஜாயிஸை கிணற்றுத் தவளை, கற்றுக்குட்டி என்று முடிவு கட்டுவதைவிட வேறு என்னதான் செய்ய முடியும்!

வருடமொன்று மறைந்தது. ஜாயிஸின் காலாண்டிதழ் அரையாண்டிதழாக வெளிவரவிருப்பதை சுதனும் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். இலக்கிய விழா ஒன்றிற்காக சுதனை அழைப்பதற்கு அவனது வீடு சென்றான் கவிஞன் சுபைதீன்.

''சேர் நீங்கள் அற்புத விளக்கு. ஜாயிஸ் மெழுகுதிரி. மெழுகுதிரி முடிகிறபோது வெளிச்சமாகத்தான் பத்தும். பிறகு கதையே முடிஞ்சிரும். நீங்கள் அற்புத விளக்கு. என்றும் எரிந்து கொண்டேயிருப்பீர்கள்'' என்றான் சுபைதீன்.

''பிறகு எப்போ உங்கட விழா?''

''வாற ஞாயிறு. கண்டிப்பா வந்திரனும் சேர்''

''நான் எந்த இலக்கிய விழாவிற்கும் போகாமல் விடுவதில்லை. ஜாயிஸைப் போன்ற நன்றிமறந்த தகுதி தராதரமற்ற கீழ்த்தர மானவர்களின் விழாவிற்குப் போவதில்லை. தகுதியானவர் களின் அழைப்பு எனக்குக் கிடைக்கும். அதற்கு நான் போவேன்'' என்றான் எழுத்தாளன் சுதன்.

''இம்முறை முந்நூறு பிரதிகள்தானாம் தூறல் அச்சிட்டவராம். காலப்போக்கில் தூறலும் நின்றிடும் சேர். இல்லாட்டி ஊரெல்லாம் நாறல் ஏற்பட்டுவிடும்'' என்றான் கவிஞன் சுபைதீன்.

''மெழுகுதிரியை ஏன் நாம் பெரிசாப் பேசணும்? விட்டுத் தள்ளுவோம்'' என்றான் எழுத்தாளன் சுதன்.

137170
6424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லதையும் நல்லவரையும் வாழ்த்துவேன்
தீயதையும் தீயவரையும் எழுத்தால் எரிப்பேன்.

ISBN. 955 - 8642 - 02 - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org